508

வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

பிப்ரவரி 1953

508
1.53.

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.

1728

அணா 6



...ரெஸாக்...

THE VAKIL • TAMIL LAW MAGAZINE

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
—கிடைக்குமிடம்—

ராணி
ரெங்கய்யர்
சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு :—
20, லக்ஷிமிபுரம் 2-வது தெரு,
மதுரை.

*

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்
பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக
ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ரெங்கமூர்த்தி
கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—
காரைக்குடி, நாட்டரசன்கோட்டை.

"வக்கீல்"

பொது மக்களுக்கான உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,
[ஆசிரியர்]

"வக்கீல்" சந்தா விபரம்

தனிப் பிரதி அணா 6. வருட சந்தா ரூ. 5 விசேஷ வருட சந்தா ரூ. 9. ஷை வெளிநாடு ரூ. 10. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:— வருஷ சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்களும், அந்த வருடத்திய பொருள் அட்டவணையும் அனுப்பப்படும். (பொருள் அட்டவணை தேவையில்லாதவர்கள் அணா 8 கழித்துக் கொண்டு பாக்கி ரூ. 4-8-0 அனுப்பினால் போதும்.) விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு மேற்கண்டவை அனுப்புவதுடன் அவ்வருடத்திற்குள் "வக்கீல்" சப்ளிமெண்டுகளாக பிரசுரமாகும் 3 சட்ட புத்தகங்களும் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்டவேண்டியதில்லை. அவர்களுக்கு மேற்கண்டவை எல்லாம் அனுப்பப்பட்டுவரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

"வக்கீல்"

(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்)	ரூ. 100
உள் அட்டை முழுப் பக்கம்	ரூ. 80
உள் பக்கம் முழுப் பக்கம்	ரூ. 60
ஷை ... அரைப் பக்கம்	ரூ. 35
ஷை ... கால் பக்கம்	ரூ. 20
ஒரு காலம் - அங்குலம்	ரூ. 5

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

வக்கீல்

பொருள் அடக்கம்

மலர் 5 பிப்ரவரி 1953 இதழ் 2

காங்கிரசின் உயில் .. 3
புதிய சட்டங்கள் .. 5
சர்க்கார் அறிக்கைகள் .. 9
வரிகள் .. 11
கண்ட்ரோல் .. 12

வழக்கும் - தீர்ப்பும்

*குடும்பச் சொத்துக்களை இந்துத் தகப்பன் அடமானம் வைத்த பிறகு பிறந்த குழந்தைகள், அடமானம் செல்லாதென்று ஆட்சேபிக்க முடியுமா? .. 15

*கணவனுடமிருந்து ஜீவனாம்சம் கிடைக்க மனைவியின் வழக்கு சிவில் கோர்ட்டில் தாவா செய்வதற்கும் கிரிமினல் கோர்டில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்கும் உள்ள வித்தியாசம். .. 17

*நீதிபரிபாலன முறையில் ஒரு அடிப்படையான விதி - சுப்ரீம கோர்ட் தீர்ப்பு .. 18

* 'தொழிற்சாலை'கள் என்றால் என்ன? சர்க்கார் அறிக்கை செல்லவில்லை. சுருட்டுக் கம்பெனி வழக்கு. .. 19

*மதுவிலக்குச்சட்ட வழக்கு பழைய சர்க்கரைத் தண்ணீரும் சாராயம் போலத்தான் நாறும் தூங்குபவரைத் தட்டி எழுப்பினாலும் அவருடைய கண்கள் சிவந்துதான் இருக்கும் .. 20

கேள்வியும் - பதிலும் .. 21

சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம்—1950 .. 27

உங்கள் தீர்ப்பு என்ன? .. 31

எமது அன்பர்களுக்கும்

வாடிக்கைக்காரர்களுக்கும்

எமது அன்பார்ந்த வாழ்த்துக்கள்!

ருக்மணி ஸில்க் எம்போரியம்

பெரிய தெரு, :: கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ் :

மைலாப்பூர் ராதா ஸில்க் எம்போரியம்

மதராஸ்.

பிரசித்தி பெற்ற

ஸ்ரீதேவி & கோ

நெம்பர் 1 ஸ்பெஷல்

பட்டணம் பொடியை

உபயோகியுங்கள்

எங்கும் கிடைக்கும்.

— ஸ்ரீ தேவி & கோ —

சன்னாநல்லூர் P.O. நன்னிலம் S.I.R.

புரோப்ரைட்டா—P. தனிக்கோடி நாடார்

ஆடைகளை அழகு பெறச் செய்வது

~ அன்னகிளி ~

சோப்

—தயாரிப்பவர்—

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38 :: தஞ்சாவூர்

சுல்தானியா படை மருந்து

இது 37 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ - சைனா முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி எச்சிற்றழும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணா 12.

சிறிய ,, ,, ,, அணா 6.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

ஜெயரசம் டிப்போ,

அய்யம்பேட்டை S. Ry.

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

187719

மலர் 5 பிப்ரவரி 1953 இதழ் 2

காங்கிரசின் உயில்

நமது காங்கிரஸ் மகா சபை மற்றொரு முறை கூடிக் கலைந்துவிட்டது. சென்ற மாதம் ஹைதராபாத்தில் நடந்தது காங்கிரஸ் மகாசபையின் ஐம்பத்து எட்டாவது கூட்டம். தனி மனிதனுக்கு அறுபதாம் ஆண்டில் ஏற்படுவதாகச் சொல்லப்படும் தடுமாற்றமும் தட்டுக் கெடலும், இம்மகா சபைக்கு, இரண்டு ஆண்டுகள் முன்னதாகவே வந்து விட்டன.

எப்போதும் காங்கிரஸ் மகாசபை கூடுவது ஒரு பெரிய வைபவமாகவே இருக்கும். காங்கிரஸ் நடவடிக்கைகளைக் கவனிக்க ஏராளமான பொதுமக்கள் எங்கெங்கெருந்தோ வந்து டிக்கட் வாங்கி உள்ளே போவார்கள். இடம் அகப் படாது. உள்ளே இருப்பவர்களைப்போல் பன் மடங்கு எண்ணிக்கையுள்ள மக்கள் வெளியே இருந்து ஒலிபரப்பி மூலம், நடவடிக்கைகளைக் கவனிப்பார்கள். லக்ஷக் கணக்கான மக்கள் இம்மகா சபையில் நடப்பதை எல்லாம் தினசரிப்பத்திரிகை வாயிலாக ஆவலுடன் அறிந்து கொள் வார்கள். ஆனால், இம் முறை காங்கிரஸ் சபைக்குக் காங்கிரஸ் மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 3600 பிரதிநிதி களில் பாதிப் பெயர்கள்கூட அங்கே போகவில்லை. போனவர்களுள் சிலர் உண்மைப் பிரதிநிதிகள் அல்லர் என்று சந்தேகிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர் பிரதிநிதிகளின் தேர்தல்களே ஊழல் களும் தில்லுமல்லுகளும் நிரம்பியதென்று நேரு வருத்தமடைந்தார். ஆனால் பதவி களின்மேல் கொஞ்சம் ஒரு கண்ணை எப் போதும் வைத்துக் கொண்டிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத் தினர்கள் மொத்தம் 451ல் 355 அங்கத் தினர்கள் ஆஜரில் இருந்தனர். பாதிப்பேர் மந்திரிகளாக இருக்கலாம். பொது மக்கள் உள்ளேபோய், காங்கிரஸ் நடவடிக்கை களைக் கவனிக்க டிக்கட் ரூ. 5 வைத்திருந் தார்கள். உள்ளே கூட்டம் இல்லாமற் போகவே இக்கட்டணத்தை ரூ. 2 ஆகக் குறைத்தனர். அதற்குள் நாட்டில் எங்கும் நடக்கும் ஒரு விஷயம் அங்கேயும் சடசட வென்று நடந்துவிட்டது. ஏனென் றால் டிக்கட் விலை குறைக்கப்படும் விஷயம்

தெரிந்து கொள்ளாத மக்களிடம் ரூ. 5 டிக்கட்டையே கள்ள மார்க்கெட்டில் சிலர் அதிக விலைக்கு விற்றுவிட்டதாகத் தினசரிப் பத்திரிகை*களின் வாயிலாகத்

தெரியவருகிறது. காங்கிரஸ் என்பது இந் நாட்டு மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரே ஸ்தாபனம் என்றால், கள்ள மார்க் கெட்காரர்கள் மட்டில் அங்கே தங்கள் பிரதிநிதிகளை அனுப்பாமலா இருந்து விடுவார்கள்!

வெளி விஷயங்கள் இப்படி இருக்க, இந்நாட்டின் மக்களுக்குக் காங்கிரஸ் சபையானது என்ன வழி காட்டியிருக்கிற தென்று பார்ப்போம். ஆறாவது முறை யாக காங்கிரஸ் தலைவர் பதவி வகிக்கும் நமது நேருஜி எப்போதும் போல் வான வீதியிலேயே சஞ்சாரம் செய்தார். அகில உலகத் திரையில் இந்நாடு வகிக்கும் இடத்தை அவர் சுட்டிக் காட்டினார். காங்கிரசின் கொள்கைகளையும் லட்சியங் களையும் நேருஜி விளக்கினார். காங்கிரசும் அவற்றை ஆமோதித்தன.

ஆனால் இவை என்ன என்பது பாமர மக்களுக்கு வியக்தமாகத் தெரிவதாக இல்லை. இரண்டொரு விஷயங்களைக் கவனிப்போம். இந்தியாவின் அயல் நாட்டுக்கொள்கை என்ன? நடு நிலைமை. இதில் என்ன அதிசயம்? யுத்தம் ஒன்று நிச்சயமாக ஏற்படும் வரை, இந்தியா மட்டில் என்ன, எல்லா நாடுகளும் நடு நிலைமைதான். வல்லரசுகளுக்குள் ஒரு யுத்தம் வருமாகில், இந்தியாவானது நடு நிலைமை வகிக்குமா, அதற்கு வேண்டிய சக்தியும் ஆயுத பலமும் நம்மிடமிருக் கிறதா, அல்லது யாருடன் சேரும், என்ப தல்லவா பிரச்னை. நம்முடைய கையில் அணுகுண்டு ஒன்றாவது இருக்கும் நிலை மை வரும் வரை, இப்பிரச்னையின் முடிவு நமது கையில் இல்லை. இப்போது நடு நிலைமை என்பது ஒரு அலங்காரச் சொல். அதைப்போலவே தான் மற்ற விஷயங் களிலும், காங்கிரசின் பொருளாதாராக் கொள்கைகள் என்ன? உற்பத்திச்சாதனங் களை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுவதா அல்லது அவ்வேலையைத் தனி மக்க ளுடைய சொந்த முயற்சியிலும் பொறுப் பிலும் விட்டுவிடுவதா? இரண்டும் வேண் டும் என்பது தான் காங்கிரசின் பதில்.

நிலங்களைப்பற்றிக் காங்கிரசின் கொள் கைகள் என்ன? நிலங்களைத் துண்டு துண்டாக்கக் கூடாது; ஒன்று சேர்க்க வேண்டும். நிலத்தை உழுபவருக்கே சொந்தமாக்கிவிட வேண்டும்; அதற்காகத் துண்டுபோட வேண்டும். யந்திரங்களால் நிலத்தை உழவேண்டும்; கலப்பைகளே நமது செல்வம்-இவை எல்லாம் ஒன்றுக் கொன்று நேர் விரோதமான கொள்கை கள். இருந்தாலும் இவை எல்லாம் சேர்ந் ததுதான் காங்கிரசின் நிலச் சம்பந்தமான கொள்கைகள்!

பாஷாவாரி மாகாணங்கள் வேண்டுமா? வேண்டும்; ஆனால் எல்லாம் இப்போது வேண்டாம். இரண்டும் சேர்ந்ததுதான் காங்கிரசின் கொள்கை!

காங்கிரஸ் சபையானது மக்களுக்கு வழிகாட்டவில்லை. மக்களிடையே பரந்து நிற்கும் மாறுபாடான அபிப்பிராயங்கள், கொள்கைகள் குழப்பங்கள் இவற்றின் புகைப்படம் தான் இன்றைய காங்கிரஸ்; காங்கிரசுக்கு வயதாகிவிட்டது. இக் குழப்பங்களை எல்லாம் தனித்தனியாக நாம் தெரிந்து கொள்ளுவது கஷ்டமாக இருக்குமென்று காங்கிரஸ் இவைகளை எழுத்து மூலம் எழுதி வைத்திருக்கிறது. இதுதான் ஐந்தாண்டுத் திட்டம்!

இதுதான் காங்கிரசின்....உயில்.

ஆனால் காங்கிரசின் வார்சுகள் யார்?

* 19-1-1952 மதராஸ் மெயில்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

1952 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறை வேற்றப் பட்டவை முதலில் இருக்கும் எண், அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

66. இந்திய தீர்வைப் பட்டியல் நான்காவது திருத்தச் சட்டம் The Indian Tariff Fourth Amendment Act 1952 (2—12—1952).

67. ஜீனி-தாற்காலிக அதிக சுங்கவரிச் சட்டம். Temporary Additional Exeise Duty Act 1952 (12—12—1952.) ஏற்கனவே மத்திய சுங்க-உப்புச் சட்டப்படி ஜீனிக்கு விதிக்கப்பட்டு வரும் சுங்கவரி தவிர, 6—11—1952 தேதியில் சர்க்கரை ஆலைகளில் இருக்கும் ஜீனி ஸ்டாக் மீதும், அத்தேதியிலோ அதற்குப் பிறகோ உற்பத்தி செய்யப்படும் ஜீனியின் மீதும் டன் ஒன்றுக்கு ரூ. 1—6—0 விதம் ஒரு அதிக சுங்கவரி வசூல் செய்யப்படும். 'கந்தசாரி'ச் சர்க்கரை என்ற நாட்டுச் சர்க்கரைக்கும் பனஞ் சர்க்கரைக்கும் இச் சுங்க வரி கிடையாது.

68. இந்திய எண்ணெய்விதை கமிட்டி திருத்தச் சட்டம். The Indian Oil Seeds Committee Amendment Act 1952. (13—12—1952.) இச் சட்டப்படி ஸ்தாபிக்கப்படும் கமிட்டியில் யார் யார் அங்கத்தினராக இருக்கவேண்டுமென்பது பற்றிய ஷரத்துக்கள் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன.

69. இந்திய தேங்காய் கமிட்டி திருத்தச் சட்டம். Indian Coconut Committee Amendment Act 1952. (13-12-1952.) இச் சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கமிட்டியில் யார் யார் அங்கத்தினர்களாக இருக்கவேண்டுமென்பது பற்றிய ஷரத்துக்கள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன.

70. இந்திய உரிமைகள்-முறைகள் பாதுகாப்புச் சட்டத்திருத்தம். Indian Patents and Designs Amendment Act 1952. (18—12—1952) உணவு அல்லது மருந்துகளைப்பற்றியோ அவைகளை உற்பத்தி செய்யும் முறைபற்றியோ இச் சட்டப்படி அளிக்கப்படும் லைசென்சில் பொது மக்களுக்கு அவை மலிவாகக் கிடைக்கூடியதற்காக சில நிபந்தனைகளை விதிக்க கண்ட்ரோலருக்கு அதிகாரம் கொடுக்கும் ஒரு ஷரத்து இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

71. சிவில் வழக்கு முறைச் சட்டத் திருத்தம். The Code of Civil Procedure Amendment Act 1952. (18—1—1952) சிவில் வழக்கு முறைச் சட்டத்தின் செக்ஷன் 44-A—திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஷரத்தானது அயல் நாடுகளில் ஏற்படும் டிக்ரிகளை இந்திய ஜில்லா கோர்ட்டுகள் நிறைவேற்றலாம் என்பதைப் பற்றியது. பிரிட்டிஷ் உயர்தர கோர்டுகளின் டிக்ரிகளையும், இதே போல் நமது டிக்ரிகளை தங்களுடைய நாட்டில் நிறைவேற்ற ஒத்துழைக்கும் மற்ற அயல் நாடுகளின் உயர்தர கோர்ட்டுகளின் டிக்ரிகளையும் இந்திய ஜில்லா கோர்ட்டில் தாகல் செய்து நிறை வேற்றலாமென்று இருந்தது. அதாவது பிரிட்டிஷ் கோர்ட்டுகள் நமது டிக்ரிகளை நிறை வேற்ற மறுத்தாலும் அவர்களுடைய டிக்ரிகளை நமது கோர்ட்டுகள் நிறைவேற்ற வேண்டுமென்று இருந்தது இப்போது ரத்து செய்யப்பட்டுள்ளது. இனி மற்ற ஒத்துழைக்கும் அயல் நாடுகளைப் போலவேதான் இங்கிலாந்தும் இவ்விஷயத்தில் பாவிக்கப்படும். ஒத்துழைக்கும் நாடுகள் எவை என்றும் அவர்களுடைய உயர்தர கோர்ட்டுகள் எவை என்றும் பிரகடனம் செய்ய மத்திய

சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

72. குடகுக்கு மைசூர் ஹைகோர்ட் அதிகார விஸ்தரிப்புச் சட்டம். Mysore High Court Extention of Jurisdiction to Coorg Act 1952. (18-12-1952) இதுவரை சென்னை ஹைகோர்ட்டின் அதிகார எல்லைக்குள் இருந்த குடகு ராஜ்யம் இச்சட்டத்தால் மைசூர் ஹைகோர்டின் அதிகாரத்திற்குள் இருக்கும்படி மாற்றப்பட்டிருக்கிறது.

1952-ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

15. சென்னை பருத்திக்கட்டுப் பாட்டுச் சட்டம் Madras Cotton Control Act 1912 (7—1—1953) பருத்தி சாகுபடி செய்பவர்கள் நன்கு கவனிக்கவேண்டிய சட்டம். இதே விஷயம் பற்றி இருந்த 1932-ம் வருடத்திய சட்டம் ரத்து செய்யப்பட்டு இச்சட்டம் சென்னைச் சட்ட மன்றத்தால் இயற்றப் பட்டிருக்கிறது. பருத்தி சாகுபடியை ஒழுங்கு செய்வதற்கும், ஒரு வகைப்பருத்தியை வேறு வகைப்பருத்தியுடன் கலக்காமல் இருக்கவும் இச்சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. இச் சட்டத்தின் 3-வது செக்ஷன்படி (1) குறிப்பிட்ட பிரதேசத்தில் எவ்வகைப் பருத்தியைத் தான் சாகுபடி செய்ய வேண்டு மென்றும்; (2) அவைதவிர அப்பிரதேசத்தில் வேறு வகைப்பருத்தியை சாகுபடி செய்யக் கூடாதென்றும்; (3) அப்பிரதேசங்களில் அனுமதிக்கப்பட்ட ஒரு வகைப் பருத்தியுடன் அனுமதிக்கப்பட்ட வேறு வகைப் பருத்தியையோ, அல்லது தடுக்கப்பட்டவகைப் பருத்தியையோ கலப்பது கூடாதென்றும்; (4) அப்பிரதேசத்தில் அனுமதிக்கப்பட்ட ஒருவகைப் பருத்தியுடன் அனுமதிக்கப்பட்ட வேறு வகை பருத்தியைக் கலந்தோ அனுமதிக்கப்படாத பருத்தியைத்தனியாகவோ கலந்தோ எவரும் தம் வசம் வைத்திருப்பதும் வியாபாரம் செய்வதும் கூடாதென்றும் உத்தரவு செய்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நூல் அல்லது நெசவு ஆலைகளில் மட்டில் நூல் நூற்கவும் துணி நெய்யவும் பல ரகப்பருத்திகளைக் கலக்க அவர்களுக்கு சர்க்கார் அனுமதி கொடுக்கலாம். இச்சட்ட ஷரத்துக்களை மீறுவது குற்றமாகும். இச்சட்டத்திற்கு விரோதமாக சாகுபடி செய்பவர்களுக்கு முதல் தடவை ரூ. 20 வரையும் பிறகு செய்யும் குற்றத்திற்கு ரூ. 50 வரையிலும் அபராதம் விதிக்கப்படலாம். ஆனால் பலரகப் பருத்தியைக் கலக்கும் குற்றத்திற்கும் கலந்த பருத்தியில் வியாபாரம் செய்யும் குற்றத்திற்கும், அவற்றைத் தம் வசம் வைத்திருக்கும் குற்றத்திற்கும் ரூ. 10,000 வரை அபராதம் விதிக்கப்படலாம். மேலும் குற்றம் சம்பந்தமான பருத்தி வகையறாவும் சர்க்காருக்கும் பறி முதல் செய்யப்படலாம். இச் சட்டத்தை அனுசரித்து விதிகள் செய்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

16. சென்னை மோட்டார் பஸ்—லாரி வரிச்சட்டம். Madras Motor Vehicles—Taxation of Passengers and Goods Act 1925. (7—1—1953.) சென்னை ராஜ்யத்தில் மோட்டார் பஸ்களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் மீதும், மோட்டார் வாடகை லாரிகளில் ஏற்றிச் செல்லப்படும் சரக்குகளின் மீதும் இச்சட்டத்தால் ஒரு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. பஸ் பிரயாணம் செய்பவர்களிடமிருந்து வசூலாகும் கட்டணத்தில் ரூ 1க்கு 9 தம்படி விதமும் லாரிக்காரர்கள் வசூல் செய்யும் கட்டணத்தில் ரூ. 1க்கு 6 தம்படி விதமும் இவ்வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அன்றாடம் 50 மைல்களுக்கு மேற்படாமல் பிரயாணம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டிருக்கும் பஸ் பிரயாண கட்டணங்களுக்கு வரி கிடையாது. பஸ் கட்டணங்களுக்கும், லாரிகட்டணங்களுக்கும் விதிக்கப்படும் இவ்வரியை கொடுக்க கடமைப்பட்டார்கள் 'பர்மிட்' வைத்திருக்

கும் 'ஆபரேடர்கள்' தான். மேலும், இவ்வரி உள்பட ஒரு ஆபரேடர் வாங்கக் கூடிய கட்டணமானது மோட்டார் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் உச்சக் கட்டணத்திற்கு மேற்படக்கூடாது. ஆபரேட்டர்கள் மனுச்செய்து கொண்டு தாங்கள் கொடுக்க வேண்டிய வரித்தொகையை எவ்வளவு என்று சர்க்காருடன் ராஜி செய்து கொண்டு அதன்படி கட்டி வரலாம். பஸ்காரர்கள் மைல் 1க்கு வருடம் 1க்கு ஸ்தானம் 1க்கு அணா 6 வீதம் கொடுத்தோ, அல்லது ஸ்தானம் 1க்கு 3 மாதங்களுக்கு ரூ. 12-8-0 வீதமோ கொடுத்தோ; லாரிக்காரர்கள் மாதம் 1க்கு ரூ. 22-8-0 வீதமும் கொடுத்தோ, மேற்கண்டபடி ராஜிசெய்து கொள்ள இச் சட்டம் அனுமதிக்கின்றது. இவ்விதம் ராஜி செய்துகொள்ளாத ஆபரேடர்கள் சரியான கணக்கு கொடுத்து மாதாமாதம் இவ்வரியை சர்க்கார் கஜானாவில் கட்டி வரவேண்டும். கெடுப்படி வரி கட்டாமலிருந்தால் அபராதம் விதிக்கப்படும். வரி அபராதம் இவற்றை டிமாண்டு நோட்டீஸ் கிடைத்த 15 தினங்களுக்குள் கட்டாவிட்டால் அவற்றை கட்டும்வரையிலும்; கணக்குகள் அனுப்பவேண்டிய ஆபரேட்டர்கள் கெடுப்படி கணக்கு அனுப்பாவிட்டால் கணக்கு அனுப்பும் வரையிலும் பஸ் அல்லது லாரிகளை எந்தப் பொது ரஸ்தாக்களிலும் உபயோகிக்கக்கூடாது. டிமாண்டு நோட்டீசின் பேரில் 30 நாட்களுக்குள் டிரான்ஸ்போர்ட் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம். இச் சட்டப்படி கணக்குகள் அனுப்பாமலிருப்பது, வரி கட்டாமலிருப்பது, கணக்கில் பொய் பதிவுகளை செய்வது, சட்ட ஷரத்துக்களையோ, விதிகளையோ வேண்டுமென்று மீறுவது, இவை எல்லாம் குற்றமாகும். ரூ. 1000வரை அபராதம் விதிக்கப்படலாம். அபராதம் தவிர வரித்தொகையும் அபராதம் போலவே வசூலிக்கப்படும். குற்றங்களையும் ராஜிசெய்து கொள்ளலாம். இச் சட்டத்தை அமுல் நடத்த சர்க்கார் விதிகள் ஏற்படுத்தலாம்.

விதிகள்

சென்னை மோட்டார் பஸ் லாரி வரிச் சட்ட விதிகள்

இச் சட்டத்தை அனுசரித்து சென்னை சர்க்கார் விதிகளும் ஏற்படுத்தி விட்டனர். இச்சட்டமும் விதிகளும் 1—2—1953 முதல் அமுலுக்கு வருகின்றன. இவ்விதிகள் 21—1—1953 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட்—பாகம் 9—ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. பஸ்லாரி ஆபரேடர்கள் இச் சட்டத்தையும் விதிகளையும் நன்கு தெரிந்து கொள்ளுவது மிக அவசிய மாகும்.

சென்னை கலப்புத்தடை விதிகள் திருத்தம் காபியுடன் சிக்கரி சேர்த்துவிற்கலாம்

சென்னை கலப்புத்தடைச் சட்டத்தை Madras Prevention of Adulteration Act 1918) அனுசரித்து ஏற்பட்டிருக்கும் விதிகளில் விதி 28 F என்ற ஒரு புதிய விதி சேர்க்கப்பட்டது, அதாவது 1-4-1952 முதல் எவரும் காபியுடன் சிக்கரியையோ வேறு சரக்குகளையோ கலந்து விற்பனை செய்யக்கூடாதென்பது தான் இவ்விதி. ஆனால் 1-4-1952 வருவதற்குள்ளாகவே மேற்படி விதியானது 31-3-1953 வரை அமுலுக்கு வராதபடி மறுபடியும் ஒரு திருத்தம் செய்யப்பட்டது. 28 F என்ற காபியுடன் சிக்கரி கலக்கக் கூடாதென்ற விதியையே ரத்து செய்து விட்டனர்.

(17—12—1951—சென்னை சர்க்கார் கெஜட் ரூல் சப்ளிமெண்ட் பாகம் I A—பக்கம் 227.)

கியாதி பெற்ற "தினமணி பல்பொடி"

அரை அவுன்ஸ் பாக்கெட் 2 அணா.

இந்த பல்பொடி சிறந்த முறையில் வைத்திய சாஸ்திரப்படி நிபுணர்களால் தயார் செய்யப்பட்டது. ஒருமுறை பரீக்ஷித்தால் இதன் உண்மை விளங்கும். எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர்:—

P. கோவிந்தராஜுலு செட்டியார்

கொட்டையூர், கும்பகோணம்.

" குல்ஷபா "

இரத்த சுத்தி லேகியம்

இரத்தத்தை சுத்தி செய்து, ஜீரணத்தை அதிகரித்து மலச்சிக்கலை நீக்கி, வயற்று வலி, ஈரல் குலை வலி, இருமல், பித்த வாய்வு இவைகளை குணப்படுத்தி நரம்புகளுக்கு பலம் கொடுத்து பாலிய நரையை மாற்றி இளமை அளிக்கும். தோல் சம்பந்தமான சகல வியாதிகளையும், நாள்பட்ட இருமல், நாள்பட்ட தலைவலி குணப்படுத்தும் சாப்பிடுவதற்கு அதிக ருசிகரமாய் இருக்கும் பத்தியம் கிடையாது.

10 நாள் 20 வேளை மருந்து டின் 1-க்கு
விலை ரூ. 2-0-0

டாக்டர் ஜி. எஸ். அமீனதீன், எம். டி. எம். எஸ்
ஹோமியோ கிளினிக்,
ரயில்வே ரோடு, கும்பகோணம்.

சுதந்திர கபே

டவுன்ஹால் ரோடு, கும்பகோணம்.

ஹோட்டலில் கைதேர்ந்த பிராமணர்களை கொண்டு தயாரிக்கப்பட்ட இனிப்பு பக்ஷணங்களும், குளிர்ந்த பானங்களும் கிடைக்கும். டீ பார்ட்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை செய்யப்படும் ஒருமுறை விஜயம் செய்யவும்.

" வக்கீல் "

"வக்கீல்" பத்திரிகைக்கு மதுரை டவுன் ஸோல் ஏஜண்டு பத்மா நியூஸ் ஏஜன்சி
(Pro : V. R. சாமிகோபால் செட்டியார்)
50, டவுன் ஹால் ரோடு, மதுரை.

வெண்சங்கு மார்க்

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

நறுமண சீயக்காய்த்தூள்
REGD. No. 13817.

உரிமை:
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்-தஞ்சாவூர்..

ஸ்ரீ சீயக்காய்த்தூள்

அறிவிப்பு

பழைய கார்களை விற்பதற்கும்
புதிய கார்களை வாங்குவற்கு எழுதுங்கள்.
1939 மாடல் முதல் 1952 வரை
சப்ளை செய்ய

G. S. PILLAI,
11, Mela Panjukara St.,
KUMBAKONAM.

உ
ஸ்ரீ மகாலெக்ஷ்மி துணை

திருக்காட்டுப்பள்ளியில்
பஸ் ஸ்டாண்டுக்கு சமீபத்திலுள்ள

☞ திருச்சி கபே

ஹோட்டலில் கை தேர்ந்த பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும் இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும். டீபார்ட்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை செய்யப்படும். ஒருமுறை விஜயம் செய்யவும்.

உயிர் ஓவியம், உயர் காவியம், உத்தம தியாகம்
உலகிற்கீந்த உயர்தர **சிவாஜி மார்க்**
புகையிலையை உபயோகித்து பரீட்சியுங்கள்

உரிமையாளர் :—

S. M. அப்துல்காதர் ராவுத்தர்

மேல 4-ம் வீதி, புதுக்கோட்டை

சர்க்கார் அறிக்கைகள்

விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பள நிர்ணயம்.

1948-ம் வருடத்திய குறைந்தபட்ச சம்பளச் சட்டத்தின் (The Minimum Wages Act 1948.) செக்ஷன் *3, 5* ஷரத்துக்களில் கண்ட அதிகாரத்தை உபயோகித்து சென்னை ராஜ்யத்தில் விவசாய வேலைகளில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு அடியில் கண்டபடி குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயம் செய்யப் போவதாக சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர். இது விஷயமாக ஆட்சேபனைகளையும், ஆலோசனைகளையும் சென்னை 'கமிஷனர் ஆப் லேபர்' மூலமாக சென்னை சர்க்கார் அபிவிருத்தி இலாகா (Development Department) வுக்கு *1-3-1953* தேதிக்குள் அனுப்பலாம்.

வேலை.	நாள் ஒன்றுக்கு எல்லாம் சேர்த்து குறைந்த பட்ச சம்பளம் ரூ. அ. பை.
(1) உழுவது மாடு கலப்பையுடன்	1 8 0
(2) விதை விரைப்பது	0 12 0
(3) நடவு	0 12 0
(4) களைபிடிக்குவது	0 12 0

மேற்கண்ட சம்பளமானது அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி, மற்ற சலுகைகள் எல்லாவற்றிற்கும் சேர்த்து சர்வடக்கமானது. (7-1-1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I—பக்கம் *4*.)

2-1-1953க்குள் தேர்தல் நடக்காத பஞ்சாயத்து அங்கத்தினர்களின் பதவி காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

கிராம பஞ்சாயத்து மெம்பர்களின் பதவிகாலம் 2-1-1953 வரை சர்க்காரால் நீடிக்கப்பட்டிருந்தது. மேற்படி தேதிக்குள் தேர்தல்கள் முடியாமலிருக்கும் பஞ்சாயத்துக்களின் அங்கத்தினர்களுடைய பதவி காலத்தை சென்னை சர்க்கார் மறுபடியும் நீடித்திருக்கின்றனர். அதாவது *1-4-1953* பகல் *12* மணி வரையிலோ; அல்லது அதற்கு முன் சில பஞ்சாயத்துக்களில் புதிய தேர்தல்கள் நடந்து விட்டால் அப்பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட வரையில் அதன் அங்கத்தினர் தேர்தலோ, தலைவர் தேர்தலோ எது முந்தி நடக்கிறதோ அத்தேதிவரையிலோ இப்போதிருக்கும் அங்கத்தினர்களின் பதவி காலம் நீடிக்கப்பட்டிருக்கிறது. *2-1-1953*க்கு முன் தேர்தல் முடிந்த பஞ்சாயத்துக்களின் ஜாப்தாவும் இச்சர்க்கார் உத்தரவுடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இச்சர்க்கார் அறிக்கை

2-1-1953 பகல் 12 மணி முதல் அமுலுக்கு வந்ததாக பாவிக்கப்படும். 5-1-1953 தேதியுள்ள G.O. No 25 L.A. 7-1-1953 தேதி சென்னை சர்க்கார் கெஜட் பாகம் IA பக்கம் 27.)

[குறிப்பு :— இச்சர்க்கார் அறிக்கை செல்லாதென அபிப்பிராயப்பட இடமிருக்கிறது. புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் 3வது ஷிடியூலில் கண்ட விதி 4 (1)ல் என்ன இருக்கிறதென்ருல், இப் புதிய சட்டம் அமுலுக்கு வரும்போது பதவி வகிக்கும் பஞ்சாயத்து மெம்பர்களே புதிய சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களாக பாவிக்கப்பட வேண்டுமென்றும், சர்க்காரால் குறிப்பிடப்படும் ஒரு தேதிவரையில் அவர்கள் பதவி வகித்து வருவார்களென்றும், அப்படி சர்க்கார் யாதொரு தேதியும் குறிப்பிடாவிட்டால் பழைய சட்டப்படி அவர்கள் எந்த எந்தத்தேதி வரையில் பதவி வகிக்கலாமோ அது வரை தான் அவர்களுடைய பதவி நீடிக்குமென்றும் வியக்தமாக இருக்கிறது. இந்த அதிகாரத்தை உபயோகித்து ஒரு தடவைக்கு மேல் மெம்பர்களின் பதவி காலத்தை நீடிக்க சர்க்காருக்கு அதிகாரமிருக்கிறதா என்ற பிரச்னை ஒரு புறமிருக்க, 2-1-1953 உடன் முடியும் பதவி காலத்தை அது முடியும் முன்னதாகவே சர்க்கார் நீடித்திருக்கவேண்டுமே ஒழிய, சட்டப்படி 2-1-1953ல் பதவி இழந்த பஞ்சாயத்தார்களுக்கு மூன்று நாட்கள் கழித்து மறுபடியும் முன் தேதி முதல் அதே பதவியைக் கொடுக்க சர்க்காருக்கு அதிகாரமில்லை என்று சொல்ல இடமிருக்கிறது. இதை ஒழுங்கு செய்ய சட்ட சபையால்தான் முடியும். — ஆசிரியர் "வக்கீல்"]

'ஜெயில்'படி நிர்ணயம்

சிவில் வழக்கு முறைச் சட்டத்தின் செக்ஷன் 57ல் கண்ட அதிகாரத்தை உபயோகித்து சிவில் ஜெயிலில் வைக்கப் படுபவர்களுக்கு, 1—3—1953 முதல் ஒரு வருடத்திற்கு, அடியில் கண்டபடி ஜெயில்படி கட்டவேண்டுமென்று சென்னை சர்க்கார் நிர்ணயம் செய்திருக்கின்றனர்.

	மிலிடரி சாப்பாடு	காய்கறி சாப்பாடு
	ரூ. அ. ப.	ரூ. அ. ப.
முதல் வகுப்பு	56 0 0	52 0 0
இரண்டாம் வகுப்பு	28 0 0	26 0 0

(7-1-1953 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 12.)

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 5-ம் தேதிக்குள் உங்களிடம் கிடைக்காவிட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும்.

ஏஜண்டுகள் மூலம் "வக்கீல்" வாங்கிவரும் இந்தியாவிலிருக்கும் நேயர்களுக்கும் 5-ம் தேதிக்குள் "வக்கீல்" கிடைக்காவிட்டால் ஆபீசுக்கு எழுதி தருவித்துக் கொள்ளலாம்.

வெளிநாட்டிலிருக்கும் சந்தாதாரர்கள் சந்தாத்தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் ஏர்மெயிலில் ரிஜிஸ்டர்செய்து அனுப்பலாம்.

வருமானவரி (இன்கம் டாக்ஸ்) விதிகள் திருத்தம். கூட்டு வியாபாரத்தை 20—2—1953-க்குள் 'ரிஜிஸ்டர்' செய்து கொள்ள வேண்டும்.

இந்திய வருமானவரிச் சட்டத்தின் செக்ஷன் 59 (1)ல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து மத்திய ரிவன்யூ போர்டார் வருமானவரி விதிகளில் 20-11-1952 தேதியுள்ள S.R.O. 1953 நம்பர் உத்தரவின் மூலம், சில திருத்தங்கள் செய்திருக்கின்றனர். அவைகளுள் முக்கியமானவை:—

(1) 31—3—1953 தேதியில் முடிவடையும் (1952-53) வருடத்தில் வருமான வரி விதிக்கப்படவேண்டிய கூட்டு வியாபாரங்கள் வருமானவரிச் சட்டத்தின் செக்ஷன் 26A-படி பதிவு (ரிஜிஸ்டர்) செய்துகொள்ள 20—2—1953 தேதிக்குள் இன்கம் டாக்ஸ் ஆபீசருக்கு மனுப் போடவேண்டும்.

(2) 1953-54 வருட வரி விதிப்புக்காகவும் சரி, பிந்திய வருடங்களின் வரி விதிப்புக்காகவும் சரி கூட்டு வியாபாரப் பதிவை (ரிஜிஸ்ட்ரேஷனைப்) புதுப்பிக்க அந்தந்த வருடம் ஜூன் மாதம் 30 தேதிக்கு முன் இன்கம்டாக்ஸ் ஆபீசருக்கு மனுப் போடவேண்டும்.

(3) பழைய கூட்டு வியாபாரங்கள் 1953-54 வரி விதிப்பு வருடத்திற்காக 'ரிஜிஸ்டர்' செய்துகொள்ள, அவரவருடைய கணக்கு வருடம் அல்லது முந்திய வருடத்திற்குள் (Previous Year) இன்கம்டாக்ஸ் ஆபீசருக்கு மனுப்போட வேண்டும்.

(4) புதிய கூட்டு வியாபாரங்கள், 1932ஆம் வருடத்திய கூட்டு வியாபாரச் சட்டப்படிக்கோ, இந்திய ரிஜிஸ்ட்ரேஷன் சட்டப்படிக்கோ ரிஜிஸ்டர் செய்யப்படாதவையாக இருந்தால் கூட்டு வியாபாரம் ஆரம்பித்த ஆறுமாதங்களுக்குள்ளோ, அல்லது அவரவருடைய கணக்கு வருடம் அல்லது முந்திய வருடம் முடிவதற்குள்ளோ, எந்த [illegible] முன்னதாக வருகிறதோ அதற்குள் ரிஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டும்.

(5) ஆனால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கூட்டு வியாபாரங்கள் இந்தியக் கூட்டு வியாபாரச் சட்டப்படிக்கோ, ரிஜிஸ்ட்ரேஷன் சட்டப்படிக்கோ ரிஜிஸ்டர் செய்யப் பட்டதாக இருந்தால், அவரவருடைய கணக்கு வருடம் அல்லது முந்திய வருடம் முடிவதற்குள் இன் கம்டாக்ஸ் ஆபீசரிடம் ரிஜிஸ்டர் செய்து கொள்ள மனுப்போட வேண்டும்.

வரிகள்

குறிப்பு:—வருமானவரி (இன்கம்டாக்ஸ்) சட்டப்படி ஒரு கூட்டு வியாபாரமானது ஒரு தனி நபரைப்போல் பாவிக்கப்பட்டு அதன் மொத்த லாபத்திற்கு உகந்த விகிதப்படி அதற்கு வருமானவரி விதிக்கப்படும். ஆனால் இன்கம்டாக்ஸ் சட்டப்படி பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொண்ட கூட்டு வியாபாரங்கள் சம்பந்தப்பட்ட வரையில் கூட்டாளிகள் ஒவ்வொருவருக்கும் உள்ள தனித்தனியான 'ரேட்'படி தான் வருமானவரி விதிக்கப்படும்; வேறு சிலசலுகைகளும் உண்டு. ஆனால் இன்கம் டாக்ஸ் சட்டப்படி இன்கம்டாக்ஸ் ஆபீசருக்கு மேலே கண்ட கெடுப்படி மனுக் கொடுத்து 'ரிஜிஸ்டர்' செய்து கொள்ளும் கூட்டாளிகளுக்குத்தான் இச் சலுகைகள் உண்டு. இந்தியக் கூட்டு வியாபாரச் சட்டப்படிக்கோ அல்லது ரிஜிஸ்ட்ரேஷன் சட்டப்படி சப்ரிஜிஸ்ட்ரார் ஜில்லா ரிஜிஸ்ட்ரார் இவர்களிடமோ கூட்டு வியாபாரத்தை 'ரிஜிஸ்டர்' செய்து கொள்ளுவது இன்கம்டாக்ஸ் சட்டத்திற்குப் போதாது. இன்கம் டாக்ஸ் சட்டத்தின் கீழ் 'ரிஜிஸ்டர்' செய்து கொண்ட கூட்டு வியாபாரங்களுக்குத் தான் சலுகைகள் உண்டு என்பதைக் கவனிக்கவும்.

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

மத்திய சர்க்கார் உணவு தானிய லைசென்சு—கொள் முதல் உத்தரவு (1952) திருத்தம்.

சென்னை உணவு தானியக் கட்டுப்பாடு உத்தரவுகள் பல ரத்தானபின் 8-8-1952ல் மத்திய சர்க்காரால் ஒரு புதிய கண்ட்ரோல் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. இது தான் 1952-ம் வருடத்திய உணவு தானிய லைசென்சுக் கொள்முதல் உத்தரவு (Food Grains Licensing and Procurement Order *1952)* இக் கண்ட்ரோல் உத்தரவு *8-7-1952* இந்தியா கெஜட்டிலும் *29-11-1952* சென்னை சர்க்கார் கெஜட்டிலும் பிரசுரமாகி இருக்கிறது. (1952—ஆகஸ்டு "வக்கீல்"—பக்கம் 10 பார்க்கவும். இக்கண்ட்ரோல் உத்தரவுப்படி அவ்வுத்தரவில் கண்ட 5 வகை உணவு தானியங்களில் வியாபாரம் செய்ய லைசென்சு வேண்டும். இதன்படி உணவு தானியத்தைக் கைப்பற்றவும் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. இக் கண்ட்ரோல் உத்தரவில் (1) கோதுமை (2) நெல் (3) அரிசி (4) சோளம் (5) பஜ்ரா இந்த 5 உணவு தானியங்கள் தான் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்போது ஏற்பட்டிருக்கும் திருத்தத்தினால் இன்னும் 3 வகை உணவு தானியங்களுக்கும் இக் கண்ட்ரோல் உத்தரவு உண்டு. அவை யாவன:—(6) சோளம் Maize (7) பார்லி Barley (8) ராகிகோடு போன்ற சில்லரை வகை தானியங்கள்—Minor Millets (e. g., Ragi, Kods)

(S.R.O. *2011—6-12-1952* இந்தியா கெஜட்.)

உணவு தானிய லைசென்சு—கொள் முதல் உத்தரவு (1952) திருத்தம்.

மேற்கண்ட உணவு தானிய லைசென்சு கொள்முதல் உத்தரவானது மத்திய சர்க்காரால் திருத்தப்பட்டிருக்கிறது. அதாவது அச் சட்டத்தின் ஷெடியூலில் கண்ட உணவு தானியங்களுக்கு மட்டில் அவ்வுத்தரவு பொருந்தும்படி இருந்த வாசகத்துடன் "அவைகளிலிருந்து செய்யப்படும் சாப்பிடக்கூடிய சரக்குகளுக்கும்" இக்கட்டுப்பாடு உத்தரவு உண்டென்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

(S.R.O. *1285*—சென்னை சர்க்கார் கெஜட் விசேஷ வெளியீடு—*29-11-1952*.)

[குறிப்பு:—இவ்வுத்தரவில் கண்ட உணவு தானியங்களைக் கொண்டு சரக்குகள் தயார் செய்து விற்கும் ஹோட்டல் நடத்துபவர்களும் இக்கண்ட்ரோல் உத்தரவின்படி ஒரு லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும்போல் திருத்தப்பட்ட வாசகம் தோன்றுகிறது. — ஆசிரியர், "வக்கீல்"]

இதில் மற்றொரு திருத்தம்

மேற்கண்ட உணவு தானிய லைசென்சு கொள்முதல் உத்தரவை ஒவ்வொரு ராஜ்யத்திலோ அதன் பாகத்திலோ வெவ்வேறு தேதிகளில் அமுலுக்குக் கொண்டு வர மத்திய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. இப்பொழுது இவ்வுத்தரவின் தனித் தனி ஷரத்துக்கள் தனித்தனித் தேதிகளில் அமுலுக்கு வரும்படியும் மத்திய சர்க்கார் உத்தரவிடலா மென்று திருத்தப்பட்டிருக்கிறது.

(S.R.O. *1405—29-11-52* சென்னை சர்க்கார் கெஜட்—விசேஷ வெளியீடு.)

சென்னை ராஜ்யத்தில் அமுலுக்கு வந்த தேதி

மத்திய சர்க்காரின் உணவு தானிய லைசென்சு-கொள் முதல் உத்தரவானது சென்னை ராஜ்யத்தில் 31-10-1952 தேதி முதல் அமுலில் இருக்கும்படி மத்திய சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

(S. R. O. 1825—29-11-1952 சென்னை சர்க்கார் கெஜட் விசேஷ வெளியீடு.)

சென்னை உணவுத் தானியக் கட்டுப் பாடு உத்தரவு (1947) ரத்தாயிற்று.

மத்திய சர்க்காரால் உணவு தானிய லைசென்சு-கொள் முதல் உத்தரவு அமுலுக்கு வந்திருக்கிற படியால் சென்னை சர்க்காரால் ஏற்கனவே பிறப்பிக்கப் பட்டிருந்த 1947-ம் வருடத்திய சென்னை உணவு தானியக் கட்டுப்பாடு உத்தரவானது (Madras Food Grains Control Order 1947) சென்னை சர்க்காரால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

(G. O. 1887—29-11-1952 சென்னை சர்க்கார் கெஜட்—விசேஷ வெளியீடு.)

சென்னை எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

ரசாயன எரு, கடலைப் புண்ணுக்கு முதலிய எரு வியாபாரம் பற்றிய 1949-ம் வருடத்திய சென்னை எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவை (Madras Manure Dealers Licensing Order 1949) சென்னை சர்க்கார் ரத்து செய்துவிட்டனர்.

(G. O. 14 — 7-1-1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II பக்கம் 4.)

வெல்லம் நாட்டுச் சர்க்கரை பற்றிய சென்னை அறிக்கைகளும் ரத்து செய்யப்பட்டன.

1950-ம் வருடத்திய ஜீனி வெல்லக் கட்டுப்பாடு உத்தரவின் 6வது ஷரத்துப் படி தமக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை உபயோகித்து சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனரால் கீழேகண்ட அவரது இரண்டு உத்தரவுகளும் 30-12-1952ல் ரத்து செய்யப்பட்டுள்ளன:—

(1) நாட்டுச் சர்க்கரைக்கு உச்சவிலை நிர்ணயம் செய்திருக்கும் 13-3-1951 தேதியுள்ள உத்தரவு (2) கரும்பு வெல்லத்திற்கு சென்னை ராஜ்யத்திலுள்ள பல இடங்களில் உச்சவிலையை நிர்ணயம் செய்த 17-3-1951 தேதியுள்ள உத்தரவும் அதைத் திருத்திய 9-7-1951 தேதியுள்ள உத்தரவும்.

(14-1-1953-சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II–பக்கம் 51.)

சோளம், கம்பு, ராகி, கோரா, சமை வரகு இவற்றை ஒரு ஜில்லாவிட்டு வேறு ஜில்லாவுக்குக் கொண்டுபோக 'பர்மிட்' வேண்டும்.

இது சம்பந்தமாக சென்னை சர்க்காரால் 15-10-1952 தேதி கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருந்த உத்தரவு ரத்துசெய்யப் பட்டு அதற்குபதிலாக இப்புதிய உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இவ்வுத்தரவின்படி சென்னைராஜ்யத்திலுள்ள ஒரு ஜில்லாவில் விளையும் மேற்கண்ட தானியங்களை வேறு ஜில்லாவுக்குள் எடுத்துப் போக ஜில்லா கலெக்டரிடம் 'பர்மிட்' வாங்கிக்கொள்ள வேண்டும். 'பர்மிட்' கிடைக்க நமூனா Iன்படி மனுப்போட வேண்டும். 'பர்மிட்' நமூனா II-ன்படி இருக்கும். ஏற்கனவே நெல் அரிசி, கோதுமை உள்பட நவதானியங்கள் எவற்றையும் சென்னை ராஜ்யத்திற்கு வெளியே எடுத்துப்போவதை தடை செய்யும் உத்தரவு ஒன்று 24—6—1947 தேதி சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட் — பாகம் II பக்கம் 107–110ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவும் அமுலில் இருக்கிறது. அதை இந்த உத்தரவு பாதிக்காது. இந்த உத்தரவு மீறப் பட்டால் தண்டனை தவிர சம்பந்தப்பட்ட சரக்கு வாகனம் முதலியவைகளும் சர்க்காருக்கு பறிமுதல் செய்யப்படலாம். இவ்வுத்தரவை மீறிய குற்றத்திற்காக ஒருவர்மீது கிரிமினல் வழக்குத் தொடர ஜில்லா கலெக்டரின் முன் அனுமதி வேண்டும்.

(14—1—1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II பக்கம் 38.)

'வார்னிஷ்' உற்பத்தி விற்பனை இறக்குமதி பற்றிய புது விதிகள்

1937-ம் வருடத்திய சென்னை மது விலக்குச் சட்டத்தில் கண்ட அதிகாரங்களை உபயோகித்து சென்னை சர்க்கார் 'வார்னிஷ்' பற்றிய பழைய அறிக்கைகளை ரத்துசெய்து புதிதாக விதிகள் ஏற்படுத்தி இருக்கின்றனர்.

'வார்னிஷ்' என்பதில் 'பிரஞ்சுபாலிஷு'ம் சேர்ந்ததே. வார்னிஷ் உற்பத்தியாளர்கள் வருடம் 1க்கு ரூ. 50 கட்டி ஜில்லா கலெக்டரிடம் நமூனு DIB படி லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும். 'வார்னிஷ்' இறக்குமதி செய்ய ரிவின்யூ போர்டாரிடம் 'பர்மிட்' வாங்கிக்கொள்ள வேண்டும். இதற்கு வருடக்கட்டணம் ரூ. 150. இதற்கு காலன் ஒன்றுக்கு எவ்வளவு வரிக் கட்டணம் என்பதையும் சர்க்கார் குறிப்பிடுவார்கள். அதையும் கட்டவேண்டும். 'வார்னிஷ்' விற்பனை செய்ய ஜில்லா கலெக்டரிடம் வருடம் 1க்கு ரூ. 25 கட்டி நமூனு D VI A படி லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும். ஒரு வியாபாரமோ தொழிலோ நடத்தும் தனி நபர்களும், கூட்டு வியாபாரங்களும், தங்கள் உபயோகத்திற்காக வார்னிஷ் வேண்டுமானுல் வருடம் ஒன்றுக்கு ரூ. 10 கட்டி ஜில்லா கலெக்டரிடம் நமூனு D VI B படி லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும். நமூனு D VI A அல்லது D VI B படி லைசென்சு வாங்கிக்கொண்டவர்களுக்குத்தான் இறக்குமதி பர்மிட் கொடுக்கப்படும். வார்னிஷ் உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும், வார்னிஷைக் குடிப்பதற்காக ஒருவர் வாங்குவதாக சந்தேகம் வந்தால் அவர்களுக்கு கொடுக்கக்கூடாது. லைசென்சு இல்லாமல் சொந்த உபயோகத்திற்காக ஒரே சமயத்தில் 3 குவார்ட் அளவுக்கு மேல் எவரும் வார்னிஷை வைத்திருக்கக்கூடாது. வார்னிஷில் இருக்கும் ஸ்பிரிட்டுக்கு காலன் 1க்கு அணு 12 வீதம் உற்பத்தியாளர்களிடமிருந்தும் இறக்குமதிக் காரர்களிடமிருந்தும் கட்டணம் வசூலிக்கப்படும். வார்னிஷை மனிதர்கள் சாப்பிடும்படி எவரும் செய்யக்கூடாது. இந்த உத்தரவில் கண்ட எந்த ஷரத்தையும் மீறி நடப்பவர்களுக்கு 6 மாதம்வரை சிறை தண்டனையோ, ரூ. 1000 வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம். (31-12-1952 சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட் பாகம் I பக்கம் 514.)

சிமெண்ட் விலை நிர்ணயம்.

சென்னை சர்க்காரால் 1-12-1952 முதல் 31-3-1953 வரை அமுலில் இருக்கும்படி கீழே கண்டபடி சிமெண்டின் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் போர்ட்லண்டு சிமெண்டின் விலை சாக்கு நீங்கலாக டன் ஒன்றுக்கு ரூ. 71க்கு மேல் போகக் கூடாது. சாக்கு அல்லது பாக்கிங் தனி. அதுவும் ரூ. 14-11-0க்கு மேற்படக் கூடாது.

(G. O. 4858—சென்னை சர்க்கார் 1-12-52 கெஜட்—விசேஷ வெளியீடு.)

மின்சார வசதி (எலெக்ட்ரிக் சப்ளை) ஆடம்பர உபயோகக் கட்டுப்பாடு உத்தரவு.

சென்னை ராஜ்யத்தில் மின்சார வசதிக் குறைவு ஏற்பட்டிருப்பதால், கலியாணங்கள், டீ பார்ட்டிகள் போன்ற சமயங்களில் ஆடம்பரமாக விளக்குகள் போடப்படுவதைக் குறைக்கும் பொருட்டு, 1949-ம் வருடத்திய சென்னை அத்தியாவசியப் பண்டக் கட்டுப்பாடு சட்டத்தின் செக்ஷன் 3ல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து சென்னை சர்க்கார் ஒரு கண்ட்ரோல் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்:—சென்னை ராஜ்யம் பூராவிலும் கலியாண சமயத்திலும் டீ பார்ட்டி அல்லது வேறு சொந்த வைபவங்களிலும் அதிக எலெக்ட்ரிக் விளக்குகள் போட்டால் இவ்வுத்தரவில் கண்டபடி கட்டணம் வசூலிக்கப்படும்.

(10-12-1952—சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I—பக்கம் 1911.

பிழைத் திருத்தம்:— இந்த இதழில் பக்கம் 20-ல் இருக்கும் வழக்கின் தலைப்பில் 'சாரயம்' என்பதை 'சாராயம்' என்றும்; பக்கம் 24-ல் கேள்வி 19 பதிலில் '7186' என்று இருப்பதை **'1867' என்றும் திருத்தி வாசிக்கவும்.**



[இப் பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.]

குடும்பச் சொத்துக்களை இந்துத் தகப்பன் அடமானம் வைத்த பிறகு பிறந்த குழந்தைகள், அடமானம் செல்லாதென்று ஆட்சேபிக்க முடியுமா?

[ஆதாரம்:—1953 (1) மதராஸ் லா ஜர்னல்—31]

மற்றச் சட்டங்களுக்கும், இந்துச் சட்டத்திற்கும், சொத்து உரிமை விஷயத்தில் சில முக்கிய வித்தியாசங்கள் இருக்கின்றன. உதாரணமாக, ஒரு முஸ்லீமுக்கோ, கிறிஸ்தவருக்கோ அவருடைய தகப்பனுருடைய சொத்துக்கள் வார்சு முறைமையில் அவருக்குக் கிடைத்தால், அச்சொத்து அவருடையதே. அதில் அவருடைய குழந்தைகளுக்கு எவ்விதமான பாத்தியமுமில்லை. அவர் உயிருடன் இருக்கும்போது அதை யாருக்கு வேண்டுமானுலும் எவ்விதச் செலவுக்காகவும் விற்றுவிடலாம்; அடமானம் முதலிய பராதீனங்கள் செய்யலாம்; இனமாகவும் கொடுத்துவிடலாம். அதைப்பற்றி தம் இஷ்டப்படி அவர் உயிலும் எழுதிவைக்கலாம். சொத்து அவருடையது. அவர் செய்வதை வேறு எவரும் ஆட்சேபிக்க முடியாது. அவர் இறந்த பிறகு தான் அச்சொத்து அவருடைய வார்சுகளைச் சேரும். இந்து ஒருவர் சுயமாகச் சம்பாதிக்கும் சொத்துக்களுக்கும் அதே சட்டம் தான். ஆனுல் இந்துச் சட்டத்தில் 'பூர்வீகச் சொத்து' அல்லது 'குடும்பச் சொத்து' என்று சொல்லப்படும் சொத்துக்களைப் பற்றிய சட்டம் வேறு. இவ்வகையான சொத்தில் குடும்பத்திலிருக்கும் ஆண் மக்கள் யாவருக்கும் உரிமை உண்டு. 'பூர்வீகச் சொத்தை' வைத்திருக்கும் ஒரு இந்துவுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தவுடன், சொல்லப்போனுல் அக் குழந்தை தன் தாயின் கர்ப்பத்தில் ஜனித்தவுடனேயே அச்சொத்தில் அக் குழந்தைக்கு உரிமை, பாத்தியம், ஏற்பட்டு விடுகிறது.

'குடும்பச் சொத்து' அல்லது 'பூர்வீகச் சொத்து'க்கள் இந்துத் தகப்பனுக்கும் அவருடைய ஆண் மக்களுக்கும் சம உரிமை உள்ள சொத்தாகையால் அவற்றைத் தகப்பன் மட்டில் விற்கவோ, அடமானம் வைக்கவோ, வேறு பராதீனம் செய்யவோ முடியாது என்பது தான் பொதுவிதி ஆனுல் இவ்விதிக்கு, விதி விலக்கும் உண்டு. அதாவது குடும்ப அவசிய

மான விஷயங்களுக்கும் சரி, குடும்பலாபகரமான விஷயங்களுக்கும் சரி குடும்பச் சொத்துக்களைப் பராதீனம் செய்ய இந்தக் குடும்பத் தலைவருக்கு உரிமை உண்டு. தகப்பனும் மகன்களும் மட்டில் அடங்கிய குடும்பமாக இருந்தால், தாம் பட்ட கடன்களுக்காகவும் குடும்பச் சொத்துக்களைப் பராதீனம் செய்ய இந்தத் தகப்பனுக்கு ஒரு விசேஷ உரிமை உண்டு. ஆனால் இக்கடன்கள் குடும்ப அவசியத்திற்காகத் தகப்பனால் வாங்கப் படா விட்டாலும் அவை சட்ட விரோதமான கடன்களாகவோ, துன்மார்க்கக் கடன்களாகவோ இருக்கக்கூடாது. ஆனால் பூர்வீகச்சொத்துக்களை அடைந்த ஒரு இந்துவுக்கு ஆண் குழந்தைகளே இல்லாமலிருந்து அச் சொத்துக்கள் பூராவும் அவருக்கே உரிமை உள்ளனவாக இருந்தால், அவற்றை அவர் இஷ்டம்போல் பராதீனம் செய்யலாம். ஏனென்றால் அச்சொத்துக்களில் பாத்தியமுள்ளவர்கள் வேறு ஒருவரும் இல்லை. இவ்விதம்பராதீனம் செய்த பிறகு அவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தால், ஏற்கனவே பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களில் அக்குழந்தைக்கு யாதொரு உரிமையும் ஏற்படாது. ஆகையால் அப்பராதீனத்தை அக்குழந்தை ஆட்சேபிக்க முடியாது.

இந்த அடிப்படை விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு பிரஸ்தாப வழக்கைக் கவனிப்போம்.

இந்து ஒருவர் பூர்வீகச் சொத்தை, 1925ல் ரூ. 4000க்கு அடமானம் வைத்தார். அப்பொழுது அவருக்கு ஒரு மகன்தான் இருந்தார். அடமானத்திற்குப் பிறகு அவருக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. அடமானம் ஏற்பட்டபோது இருந்த மூத்தமகன் 1940ல் தமக்காக ஏதோ பாகம் வாங்கிக்கொண்டு விடுதலை கொடுத்துவிட்டுக் குடும்பத்தை விட்டு வெளியேபோய் விட்டார். அடமானத்தை, 'மேடோவர்'வாங்கிய ஒருவர் 1948ல் அடமானத் தொகை கிடைக்கக் கோர்ட்டில் தாவா செய்தார். அத் தாவாவானது அடமானம் எழுதிக் கொடுத்த தகப்பன் மீதும், அடமானத்திற்குப் பிறகு பிறந்த அவருடைய இரண்டு ஆண் மைனர் மகன்கள்மீதும் தொடரப்பட்டது.

மைனர் மகன்கள் இருவரும் கட்சியாடினார்கள். இந்த அடமானம் தங்களைக் கட்டுப் படுத்ாதெனச் சொன்னார்கள். இக் கட்சியானது சப்கோர்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவது இந்த அடமானமானது மைனர் மகன்களை கட்டுப்படுத்தாதென்றும், அடமானம் வைக்கும்போது, தகப்பனுக்கு அச்சொத்தில் சரிபாதி பாத்தியம் மட்டில் இருந்ததால் தகப்பனுடைய பாதி வீதம் தான் அடமானத்தால் கட்டுப்படுமென்றும் தீர்ப்புச் செய்யப்பட்டது.

வாதி சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். அடமானம் ஏற்பட்ட காலத்தில் இருந்த மகன் இந்த அடமானத்தை ஆட்சேபிக்காமல் விடுதலை கொடுத்து விட்டார் என்றும், ஆகையால் அடமானம் ஏற்பட்ட பிறகு பிறந்த மைனர் பிரதிவாதிகளுக்கு அடமானத்தை ஆட்சேபிக்கவே உரிமை இல்லை என்றும் வாதிக்காக ஹைகோர்ட்டில் வாதாடப்பட்டது.

இக்கட்சியை உயர் நீதிபதி அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தத் தகப்பன் பூர்வீகச் சொத்தைப் பராதீனம் செய்யும்போது அவருக்கு மகன்களே இல்லாவிட்டால், பிறகு அவருக்குப் பிறக்கும் மகன்கள் அதை ஆட்சேபிக்க முடியாது என்பது சரி. ஆனால் பராதீனம் செய்யும் சமயத்தில் அவருக்கு அப்பராதீனத்திற்குச் சம்மதம் கொடுக்காத ஒரு மகனாவது இருந்து அம்மகன் உயிருடன் இருக்கும் போதே தகப்பனுக்குப் புதிதாக ஆண் குழந்தைகள் பிறந்தாலும், புதிதாகப் பிறக்கும் ஆண் மக்களும் தகப்பன் செய்த பராதீனத்தை ஆட்சேபிக்கலாம். பராதீனம் ஏற்படும்போது இருந்த மகன் தம்முடைய உரிமைகளை வற்புறுத்தாமல் காலாவதியில் விட்டு விட்டாலும் கூடப் பிறகு பிறந்த மகன்களுடைய உரிமை போய்விடாது—என்பதுதான் இந்துச் சட்டம் என்று உயர் நீதிபதி அவர்களால் இத்தீர்ப்பில் அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிரஸ்தாப வழக்கில், அடமானம் ஏற்பட்ட போது இருந்த மூத்தமகன் அதை ஆட்சேபிக்காவிட்டாலும், அந்த அடமானத்தை ஒப்புக்கொள்ளாத அம் மூத்தமகன் உயிருடன் இருக்கும் போதே பிறந்த மற்ற இரண்டு மைனர் மகன்களுக்கும், தகப்பன் செய்த அடமானத்தை ஆட்சேபிக்க உரிமை உண்டென்று நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

ஆனால் இவ்வழக்கில் தகப்பன் வைத்த அடமானமானது மகன்களைக் கட்டுப்படுத்தக் கூடிய விஷயங்களுக்காகச் செய்யப்பட்டிருந்தால், அந்த அடமானமானது பூரா சொத்தையும், மைனர் மகன்களுடைய பாகத்தையும் கட்டுப்படுத்தக் கூடியதென்று நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு வாதிக்கு பூராசொத்தின் பேரிலும் தீர்ப்பு அளிக்கப்பட்டது. ஒரு முக்கிய மான சட்டப் பிரச்னையில் மைனர்கள் ஜெயித்தார்கள். ஆனால் வழக்கை இழந்தனர்.

கணவனிடமிருந்து ஜீவனாம்சம் கிடைக்க மனைவியின் வழக்கு. சிவில் கோர்ட்டில் தாவா செய்வதற்கும் கிரிமினல் கோர்ட்டில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கும் உள்ள வித்தியாசம்.

[*ஆதாரம்:*—1953 (1) *மதராஸ் லா ஜர்னல்*—43.]

நியாயமான காரணங்களினால் தனியே வசித்து வரும் மனைவியைச் சம்ரட்சிக்க வேண்டியது, கணவனுடைய கடமையாகும். இக் கடமை தவறிய கணவன் மீது நடவடிக்கை எடுத்து, தனக்குரிய ஜீவனாம்சத்தை அடைய மனைவிக்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று, சிவில் கோர்ட்டில் கணவன்மீது ஜீவனாம்ச தாவா போடுவது. மற்றொரு வழி, கணவன் ஜீவனாம்சம் கொடுக்காமல் அலட்சியமாக இருந்தாலும், கொடுக்க மறுத்தாலும் அவர்மீது மனைவி கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தின் செக்ஷன் 488—ன்படி ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிடமோ, பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டிடமோ, சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டிடமோ, முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டிடமோ அவள் ஒரு மனுப்போடலாம். இது ஒரு குறுக்கு வழி. இவ்வித மனுவில், ஜீவனாம்சம் கொடுக்காமல் கணவன் அலட்சியமாக இருப்பதோ மறுதளிப்பதோ ருசுவானால், அவர் மாதாமாதம் மனைவிக்கு ஜீவனத்திற்காக ஒரு தொகை கொடுத்து வரவேண்டுமென்று மாஜிஸ்ரேட் உத்தரவு செய்வார். மாதம் ரூ. 100க்கு மேற்பட்டுக் கொடுக்கும்படி உத்தரவு செய்ய இந்த ஷரத்துப்படி மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமில்லை.

ஆனால் (1) மனைவியானவள் விபசாரத்தில் காலம் கழித்து வந்தாலும் (2) போதுமான காரணமில்லாமல், கணவனுடன் வசித்துவர மனைவி மறுத்தாலும், (3) கணவனும் மனைவியும் ஒத்துக்கொண்டு தனித்தனியே வசித்து வந்தாலும் இம் மூன்று சந்தர்ப்பங்களிலும் கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தின் செக்ஷன் 488-இன்படி மனைவியானவள் தனக்கு ஜீவனாம்சம் கிடைக்க மாஜிஸ்ட்ரேட்டிடம் மனுப்போட முடியாதென்று செக்ஷன் 488 (4)ல் ஒரு ஷரத்து இருக்கிறது.

இந்த ஷரத்தைக் கவனிக்காமல், பிரஸ்தாப வழக்கில் ஒரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டானவர் செய்த உத்தரவு ஹைகோர்ட்டால் ரத்துச் செய்யப்பட்டது. கணவனுக்கும் மனைவிக்கும் ஒத்துக்கொள்ளவில்லை. கணவனுக்கு ஒரு வைப்பு உண்டு. தவிர இரண்டாவது கலியாணம் செய்துகொள்ளவும் அவர் விரும்பினார். இச் சந்தர்ப்பத்தில் கணவனும் மனைவியும் ஒத்துப்போய் ஒரு ஏற்பாடு செய்து கொண்டனர். சில மத்தியஸ்தர்களை வைத்துக் கொண்டு ஒருவருக்கொருவர் கணக்குப் பார்த்து கணவன் மனைவிக்கு ரூ. 5500 கொடுத்து விடுகிறதென்றும், அதில் ரூ. 1000 ரொக்கமாகக் கொடுத்தது போகப் பாக்கிக்குக் கணவன் ஒரு அடமானம் எழுதிக்கொடுத்திருபதாகவும் இவை தவிர மனைவி தனியாக வசித்து வர இஷ்டப்படுவதால் அவளுக்கு வருடம் ஒன்றுக்கு ஜீவனாம்சத்திற்காகக் கணவன் ரூ. 100 கொடுக்க வேண்டுமென்றும் கண்டு, இருவரும் ஒரு பத்திரம் எழுதிக்கொண்டனர்.

இது ஏற்பட்ட பிறகு கணவனுடைய செல்வநிலை பல காரணங்களினால் குன்றிப் போயிற்று. மனைவி கணவன் மீது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டிடம் ஜீவனாம்ச மனுக்கொடுத்து, தனக்கு மாதம் ரூ, 100 வேண்டுமென்று கேட்டாள். இந்த நடவடிக்கையில் கணவன் மனைவிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் ஜீவனாம்சம் கொடுத்து வரவேண்டுமென்று மாஜிஸ்ட்ரேட் உத்தரவு செய்தார். கணவனால் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது. கணவனும் மனைவியும் ஒப்புக்கொண்டு தனித்தனியே வசித்து வந்தபடியால் கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தின் 488 (4) ஷரத்துப்படி இம் மனுவை ஏற்றுக்கொள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்கே அதிகாரமில்லை என்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவு ரத்துச் செய்யப்பட்டது. சிவில் கோர்ட்டுகளுக்கு இருக்கும் அதிகாரத்தைப்போல் தமக்கும் இருப்பதாக மாஜிஸ்ட்ரேட் நினைத்தது தவறு என்பது உயர் நீதிபதி அவர்களால் எடுத்துக் காட்டப்பட்டது, கணவனால் எழுதிக்கொடுக்கப்பட்ட ஜீவனாம்சப் பத்திரமானது தனக்குப் பிடிக்கவில்லை என்றால், மனைவி அதை ரத்துச்செய்யவோ, அல்லது ஜீவனாம்சத்தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்றோ, சிவில் கோர்ட்டில் தான் வழக்குத் தொடரலாமே ஒழிய, மாஜிஸ்ட்ரேட்டிடம் மனுக் கொடுத்து, குறுக்கு வழியாக அவள் பரிகாரம் தேடிக்கொள்ள முடியாதென்பது இத் தீர்ப்பில் விளக்கப்பட்டிருக்கிறது.

நீதி பரிபாலன முறையில் ஒரு அடிப்படையான விதி—சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் விளக்கம்.

"எவ்வித வழக்குகளிலும் ஒரு கட்சிக்காரரானவர், எதிர்க்கட்சிக்குத் தெரியாமலும், தாம் சொல்லுவதை எதிர்கட்சிக்காரர் மறுக்கும்படியோ அதற்குச் சமாதானம் சொல்லும்படியோ அவருக்குச் சந்தர்ப்பமே இல்லாமலிருக்கும் நிலைமையிலும் நீதிபதியினுடைய மனதைக் கவர்ச்சி செய்வதற்காக எந்தச் சாதனங்களையும் உபயோகிக்கக் கூடாதென்பது நீதிபரிபாலன முறையில், ஒரு சர்வ சாதாரணமான விதியாகும்.........நீதி வழங்க வேண்டியவர் எவரும், அவர் ஒரு நீதிபதியாக இருந்தாலும் சரி, ஒரு மத்தியஸ்தராக இருந்தாலும் சரி, அவர் வழக்கறிஞராக இருந்தாலும் சரி, ஒரு வியாபாரியாக இருந்தாலும் சரி, ஒரு தரப்புக்குத் தெரியாதபடி மற்றத் தரப்பினர், தம் மனதைக் கவர்ச்சி செய்வதை அவர் அனுமதிக்கூடாது."—நீதிபதி லாங்டேல் பிரபு—'ஹார்வி V. ஷெல்டன்' என்ற ஆங்கில வழக்கில்.

[ஆதாரம்:—1953—ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—சுப்ரீம் கோர்ட்—21.]

மேலே கண்ட நீதிபரிபாலன முறைபற்றிய ஒரு விதியை ஆதாரமாக்கொண்டு, சுப்ரீம் கோர்ட்டார், இவ்வழக்கில் ஹைகோர்ட்டின் தீர்ப்பை மாற்றிவிட்டனர்.

வழக்கில் சிக்கலான விஷயங்கள் ஒன்றுமில்லை. நாராயணப்பா என்பர் 1927ல் இறந்தார். வெங்கம்மாள் என்பவள் அவருடைய இளைய மனைவி. இறந்தவர் ஒரு பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அக் குடும்பத்தில் அவருடைய சகோதரரும், மூத்த மனைவியின் மகனும், இறந்த ஒரு சகோதரருடைய மகனும் இருந்தார்கள். தம் மனைவி வெங்கம்மாவின் ஜீவனும் சத்திற்கும் குடியிருப்புக்கும் ஏற்பாடு செய்து நாராயணப்பா ஒரு உயில் எழுதி இருந்தார். இருந்தாலும் அவருடைய விதவை வெங்கம்மாள் சில காலம், குடும்பத்துடனேயே இருந்து வந்தாள். ஆனால் அவளுக்கும் அவளுடைய ஓரகத்திக்கும் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகையால் வெங்கம்மாள் தன் தாய் வீடு சென்றாள். அங்கே பதினொரு வருடங்கள் தங்கிய பின்னரே அவள் தன் கணவனுடைய சகோதரர்மீதும் மற்றக் குடும்ப அங்கத்தினர்கள் மீதும் தனக்கு ஜீவனாம்சமும், தன் நகைகளும் கிடைக்கவேண்டுமென்று கோர்ட்டில் ஒரு தாவா செய்தாள். பிரதிவாதிகள் கட்சியாடினர். வாதியின் கணவனே உயில் மூலம் வாதியின் ஜீவனத்திற்கு தகுந்த ஏற்பாடு செய்து விட்டதாகவும் அதன்படி அவள் சொத்துக்களை அனுபவித்து வருகிறாளென்றும், நகை முதலிய அவளுக்குக் கிடைக்கவேண்டியதில்லை என்றும் கட்சியாடி வந்தனர். கட்சி நடுவில், வாதி பிரதிகள் யாவரும் ஒப்புக்கொண்டு கோவிந்தப்பா என்ற ஒரு மத்தியஸ்தரை நியமித்துக்கொடுண், இவ்வழக்கின் தஸ்தவேஜுகளைக் கோர்ட்டிலிருந்து அம் மத்தியஸ்தருக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர் சொல்லுகிற தீர்ப்புப்படி தாங்கள் நடப்பதாகவும் கண்டு கோர்ட்டுக்கு ஒரு மனுப்போட்டனர். கோர்ட்டும் இம் மனுவை ஏற்றுக்கொண்டு கோவிந்தப்பாவை மத்தியஸ்தராக நியமித்து, இவ்வழக்குச் சம்பந்தமான பிராது ஸ்டேட்மெண்ட் முதலிய தஸ்தவேஜுகளும் அம் மத்தியஸ்தருக்கு அனுப்பப்பட்டன.

கோர்ட்டிலிருந்து தஸ்தவேஜுகள் வந்தவுடன் மத்தியஸ்தர் வாதியைத் தனியாக ஒரு நாள் விசாரித்தார். வேறு ஒரு நாள் வாதிக்குத் தெரியாமல் முதல் பிரதிவாதியை விசாரித்தார். இவ்விருவர்களிடமும் தனித்தனியாகவும், ஒருவர் சொல்லி இருப்பது என்ன என்று மற்றவருக்குத் தெரியாமலும், வாக்கு மூலம் வாங்கிக்கொண்டு மத்தியஸ்தர் தம்முடைய தீர்ப்பை அளித்தார்.

இத் தீர்ப்பு, செல்லாதென வாதி ஜில்லா கோர்ட்டுக்கு மனுப்போட்டாள். ஜில்லா ஜட்ஜானவர் மத்தியஸ்தர் இவ்விதம் தனித்தனியாகக் கட்சிக்காரர்களை விசாரித்தது தவறு என்று அபிப்பிராயப் பட்டு, மத்தியஸ்தருடைய தீர்ப்பை ரத்துச் செய்தார். ஆனால் அதன் பேரில் ஏற்பட்ட ஹைகோர்ட்டு அப்பீலில், ஜில்லா ஜட்ஜின் தீர்ப்பு ரத்துச் செய்யப்பட்டது. அதாவது வாதியின் மனு தள்ளப்பட்டது. அதன் பேரில் வாதி சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தாள்.

சுப்ரீம் கோர்ட்டார் ஹைகோர்டடின் தீர்ப்பை ரத்துச்செய்து, ஜில்லா ஜட்ஜ் செய்த தீர்ப்பை அங்கீகரித்தனர்.

பல ஆங்கில வழக்குகளிலும், இந்திய வழக்குகளிலும் உயர் நீதிபதிகள் இது விஷயமாக அளித்திருக்கும் அபிப்பிராயங்களைத் தழுவி, இவ்வழக்கில் மத்தியஸ்தர் செய்தது தவறு என்று சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர். மத்தியஸ்தர் மிக்க கண்யமுள்ளவராக இருக்கலாம். ஆனால் ஒரு கட்சிக்காரரை வைத்துக்கொள்ளாமல் அவர் மற்றக் கட்சிக்காரரிடம் வாக்குமூலம் வாங்கியது சட்டத்தில் ஒரு தவறான நடத்தை (Legal Misconduct) ஆகும்; இயற்கை நீதிபரிபால முறை விதிக்கு அது முரணானது; ஆகையல் அவர் செய்த மத்தியஸ்தத் தீர்ப்பு செல்லாதென சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர்.

'தொழிற்சாலை'கள் என்றால் எவை? சர்க்கார் அறிக்கை செல்லவில்லை. சுருட்டுக்கம்பெனிகள் வழக்கு.

[ஆதாரம்:—65 லா வீக்லி—1111,]

சென்னை ஹைகோர்ட்டால் சென்ற 4-9-1952ல் தொழிற்சாலைச் சட்டத்தைப் பற்றிய ஒரு முக்கியமான தீர்ப்பு அளிக்கப் பட்டது.

1948-ஆம் வருடத்திய தொழிற் சாலைச் சட்டப்படி விசையின் உதவியால் உற்பத்தி வேலைகள் நடக்கும் இடத்தில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தாலும்; அல்லது விசை உதவி இல்லாமல் உற்பத்தி வேலைகள் நடக்கும் இடங்களில் 20 அல்லது அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்தாலும் அவைகள் தான் 'தொழிற்சாலை' (பாக்டரி) களாகும். அவைகளுக்குத் தான் தொழிற்சாலைச் சட்டம் உண்டு.

ஆனால் தொழிற்சாலைச் சட்டத்தின் செக்ஷன் 85 (1) என்ற ஷரத்தின்படி ராஜ்யசர்க்காருக்கு ஒரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது விசை இருக்கும் இடங்களில் 10 தொழிலாளர்களுக்குக் குறைவாக வேலை செய்யும் இடங்களையும் சரி; விசை இல்லாத இடங்களில் 10க்குமேல் 20க்குள் தொழிலாளர் வேலை செய்தாலும் சரி அந்த இடங்களையும் 'தொழிற்சாலை'கள் என்று ராஜ்ய சர்க்கார் பிரகடனம் செய்யலாம். அப்படிப் பிரகடனம் செய்யப்பட்ட வைகளுக்கும் தொழிற்சாலைச் சட்டம் உண்டு. இந்த அதிகாரத்தை உபயோகித்து சென்னை ராஜ்ய சர்க்கார் 22-4-1948ல் ஒரு அறிக்கை பிரகடனம் செய்தனர் (3-5-1949 கெஜட் பார்க்கவும்.) அதாவது இந்த ராஜ்யத்தில், எந்த இடத்திலும் விசையில்லாமல் உற்பத்தி வேலைகள் நடக்குமிடங்களில் 10 அல்லது அதற்கு அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்தால் அவை எல்லாம் "தொழிற்சாலை"கள் என்று பிரகடனம் செய்தனர்.

பிரஸ்தாப வழக்கில் இப்போது வான அறிக்கை செல்லாதென ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர். இவ்விதம் பொதுவாக 10 தொழிலாளர்கள் அல்லது அதிக நபர்கள் வேலை செய்யும் எல்லா இடங்களையும் தொழிற்சாலைகளாகச் செய்ய ராஜ்ய சர்க்காருக்கு சட்டம் அதிகாரமளிக்க வில்லை என்றும்; இந்த அதிகாரத்தைச் சர்க்கார் உபயோகிக்க வேண்டுமானால், பெயர்கண்டு குறிப்பிட்ட எந்த எந்த ஸ்தாபனங்கள் 'தொழிற்சாலை' களாகப் பாவிக்கப் படவேண்டுமென்று சர்க்கார் சொல்லலாமே ஒழிய, குறிப்பாக இல்லாமலும் பெயர் சொல்லமலும் பொதுவாக அறிக்கையிடச் சர்க்காருக்கு அதிகாரமில்லை என்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

பிரஸ்தாப வழக்கு, திருச்சியிலிருக்கும் சில சுருட்டுக் கம்பெனிகளைப் பற்றியது. விசையின் உதவி இல்லாமல், 20க்குக் குறைந்த தொழிலாளர்களைக் கொண்டு இவை, ஒவ்வொன்றும் நடத்தப்பட்டன. இக் கம்பெனிக் காரர்கள் தொழிற்சாலைச்சட்ட ஷரத்துக்கள் சிலவற்றை மீறியதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு, மாஜிஸ்ட்ரேட்டால் ஒவ்வொருவருக்கும் ரூ. 10 அபராதம் விதிக்கப்பட்டது.

இவர்கள் சென்னை ஹைகோர்ட்டில் கொடுத்த ரிவிஷன் மனுக்களில் தான் மேற்கண்ட கட்சி சொல்லப்பட்டது. அதாவது இவை எல்லாம் தொழிற்சாலைச் சட்டத்தில் கண்டபடி தொழிற்சாலைகள் அல்ல; ஏனென்றால் விசையின் உதவி இல்லாமல் 20 நபர்களுக்குள் தான் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனரென்றும்; சென்னைச் சர்க்கார் இவ்வித ஸ்தாபனங்களையும் 'தொழிற்சாலை' என்று செய்த மேலே குறிப்பிடப்பட்ட உத்தரவானது சல்லாதென்றும் ஆகையால் இவர்களுக்கு 'தொழிற்சாலை'ச் சட்டமே பொருந்தாதென்றும் வாதாடப்பட்டது. இக்கட்சி நீதிபதி அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு, கீழ்க்கோர்ட்டின் தீர்ப்புகள் ரத்துச் செய்யப்பட்டன.

(குறிப்பு:—இத்தீர்ப்புக்குப்பின்னர் சென்னைச் சர்க்கார் தாங்கள் 22-4-1949ல் செய்த உத்தரவை ரத்துச்செய்து, குறிப்பாகப் பெயர் போட்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் சட்டத்தில் கண்ட எண்ணிக்கைக்குக் குறைவாகத் தொழிலாளர்கள் வேலை செய்து வந்தாலும் அவைகளும் 'தொழிற்சாலை'களாகப் பிரகடனம் செய்திருக்கின்றனர். 17-9-1952 தேதி சென்னைச் சர்க்கார் கெஜட் பார்க்கவும்.)

மதுவிலக்குச்சட்ட வழக்கு பழைய சர்க்கரைத் தண்ணீரும் சாராயம் போலத்தான் நாறும் தூங்குபவரைத்தட்டி எழுப்பினாலும், அவருடைய கண்கள் சிவந்துதான் இருக்கும்.

[ஆதாரம்:—1952 (2) மதராஸ் லா ஜர்னல்—579.]

மதுவிலக்குச் சட்டப்படி, நாற்றம் அடிப்படையிலிருந்தே ஒருவர் சாராயம் குடித்ததாக ஊகித்து அவருக்கு அச் சட்டப்படி தண்டனை அளிக்கக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. ஆனால் எதிரியிடமிருந்து வந்த நாற்றமானது, சாராயம் அருந்தியதால்தான் ஏற்பட்டிருக்கக் கூடுமென்பதைச் சர்க்கார் ருசுப்பிக்க வேண்டும். பிரஸ்தாப வழக்கில், எதிரியிடமிருந்து சாராய நாற்றம் வந்ததென்றும், அவருடைய கண்கள் சிவந்திருந்தன என்றும், எதிரி தாறுமாறாகப் பேசினர் என்றும் சர்க்காரால் ருசுப்பிக்கப்பட்டது. மதுவிலக்குச் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக எதிரியை மாஜிஸ்ட்ரேட் தண்டித்தார்.

எதிரியைத் தண்டிக்கப்போதுமான ருசு இல்லை என்று சென்னை ஹைகோர்ட் உயர் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் அத்தண்டனையை ரத்துச்செய்து எதிரியை விடுவித்தனர். பழைய சர்க்கரைத் தண்ணீரும் சாராயம் போலத்தான் வாசனை வருமென இவ்வழக்கிலேயே டாக்டர் சாட்சி சொல்லியிருக்கிறார். தூங்கிக்கொண்டிருக்கும் ஒருவரைப் பலமாகத் தட்டி எழுப்பினால் அவருடைய கண்கள் சிவந்துதான் இருக்கும்; அவரும் தாறுமாறாகப் பேசலாம். ஆகையால் அவர் சாராயம் குடித்திருப்பதாகச் சொல்ல முடியுமா? எதிரியினிடமிருந்து வந்த நாற்றமானது சாராயம் அருந்தியதால் தான் வந்திருக்க வேண்டுமென்றும், மற்ற அடையாளங்களும் அதனால்தான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும், வேறு வழியில் ஏற்பட்டிருக்க முடியாதென்றும் சர்க்கார் ருசுப்பித்தால் தான், எதிரியைத் தண்டிக்க முடியுமென உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

வாஞ்சூர் K. S. & CO.,

நாகூர் சோகை மருந்து

ஸ்தாபிதம் 1860

இது சோகை, முகம் வயிறு வீக்கங்கள், தீராத பாண்டு, கைகால் குடைச்சல், தொண்டை புகைச்சல், சிராணி போக்கு, நாள்பட்ட ஜுரம், சூதகக்கட்டு, அஜீரணம், மேக நீர், கண்ணில் திடீரென ஏற்படும் மறைவு முதலானவைகளை விரைவில் குணப்படுத்தி ரத்த விருத்தியை உண்டாக்குகிறது.

பலராலும் போற்றப்படுவது.

10 நாள் சாப்பிடக்கூடிய பெட்டி 1-க்கு விலை ரூ. 0—6—0

TRADEMARK

தயாரிப்பவர்கள்:-

வாஞ்சூர் K. S. & CO.,

49, மணிக்காரத்தெரு, :: கும்பகோணம்.

கல்யாண பட்டுநூல் ஜவுளிகளுக்கு

★

ராதா ஸில்க் எம்போரியம்

★

119, பெரிய தெரு, :: கும்பகோணம்.

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில் தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும், ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவது இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

1949-ம் வருடத்திய சென்னைக் கதர் அபிவிருத்தி உத்தரவு ரத்து

12. கேள்வி: (முத்துசாமி செட்டியார்—திருப்பூர்.) சென்னை அரசாங்கத்தாரால் 1949—ஆவது வருடத்திய கதர் கண்ட்ரோல் சட்டம் எடுக்கப்பட்டுவிட்டதா? அப்படியானால் தனிப்பட்ட வியாபாரம் செய்யலாமா? ஷை சட்டம் தவிர இந்திய அரசாங்கத்தின் சட்டம் ஏதாவது உண்டா?

பதில்: சென்னை அரசாங்கத்தாரால் 17-2-1949ல் 'சென்னைக் காதி அபிவிருத்தி உத்தரவு—1949'—என்ற ஒரு கதர் கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது. இவ்வுத்தரவின்படி சென்னை ராஜ்யத்தில் எவரும் கதர் நூல் அல்லது காதி ஜவுளியில் வியாபாரம் செய்ய லைசென்சு வாங்கிக்கொள்ளவேண்டுமென்றும் மேலும் மில் நூல் அல்லது ஜவுளி உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் கதர் நூல் அல்லது ஜவுளி வியாபாரம் செய்யக்கூடாதென்றும்; கதர் ஜவுளியை மூட்டையாக எடுத்துத் தெருக்களில் விற்பனை செய்யக் கூடாதென்றும் இக் கட்டுப்பாடு உத்தரவில் கண்டிருந்தது. இக் கட்டுப்பாடு உத்தரவை இப்போது சென்னைச் சர்க்கார் பூராவாக ரத்துச் செய்துவிட்டனர். (G. O. 1222—19-11-1952 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் பார்க்கவும்) இனி லைசென்சில்லாமலும் ஷை கட்டுப்பாடு உத்தரவில் கண்ட நிபந்தனைகள் இல்லாமலும் எவரும் கதர் வியாபாரம் செய்யலாம்.

ஆனால் 'கதர் பெயர் பாதுகாப்புச் சட்டம்' (Khaddar—Name Protection Act 1934) என்று ஒரு மத்தியச்சட்டம் அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கிறது. இச் சட்டப்படி 'கதர்' அல்லது 'காதி' என்ற பெயரை, கையால் நூற்கப்பட்ட பருத்தி நூலைக்கொண்டு கைத்தறியில் நெசவு செய்யப்பட்ட ஜவுளிக்கு மட்டில் தான் உபயோகப்படுத்தலாம்.

ஜீனி வெல்லம் கண்ட்ரோல்

13. கேள்வி: (L 2627 நாராயணசாமி-தஞ்சை) வெல்லம் சர்க்கரை சம்பந்தமான கண்ட்ரோலை மத்திய சர்க்கார் எடுத்துவிட்டார்களே, அது சென்னை மாகாணத்தையும் கட்டுப் படுத்துமா?

பதில்: இது சம்பந்தமாகப் பல கேள்விகள் வந்திருப்பதால் இக்கேள்விக்குப் பதில் கொஞ்சம் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1950-ல் மத்திய சர்க்கார் "ஜீனி வெல்லக் கட்டுப்பாடு உத்தரவு" (The Sugar and Gur Control Order 1950) என்ற ஒரு கண்ட்ரோல் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். இக் கண்ட்ரோல் உத்தரவு இன்னும் அமுலில் தான் இருக்கிறது. இது ரத்தாகவில்லை. இக் கண்ட்ரோல் உத்தரவின்படி ஆலைகளில் உற்பத்தியாகும் ஜீனிக்கும் சரி, கரும்புச் சாற்றைக் காய்ச்சி செய்யப்படும் வெல்லம் நாட்டுச் சர்க்கரை முதலியவற்றிற்கும் சரி, உச்சவிலையை நிர்ணயம் செய்யச் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

இக் கண்ட்ரோல் உத்தரவை அனுசரித்து அதிகாரிகளால் ஆலைகளில் உற்பத்தியாகும் ஜீனியின் உச்சவிலை அங்கங்கே நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வுத்தரவுகள் அமுலில் இருக்கின்றன.

இக் கண்ட்ரோல் உத்தரவை அனுசரித்து ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் வெல்லம் நாட்டுச் சர்க்கரை இவற்றின் விலையை மத்திய சர்க்கார் 1950 டிசம்பர் மாதத்தில் நிர்ணயம் செய்திருந்தனர் (S.R.O. 1000; S.R.O. 1003-50) இந்த உத்தரவை 30-9-1952ல், S.R.O. 1673 என்ற உத்தரவு மூலம் மத்திய சர்க்கார் ரத்துச்செய்து விட்டனர். 13-12-1952 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் தான் மத்திய சர்க்காரின் இந்த ரத்து உத்தரவு பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. (1953 ஜனவரி "வக்கீல்"—பக்கம் 14-பார்க்கவும்). இப்போது சென்னை ராஜ்யத்திலும் வெல்லம் நாட்டுச் சர்க்கரை இவைகளுக்கு சிவில் சப்ளை கமிஷனரால் பிரத்தியேகமாக விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்த இரண்டு உத்தரவுகளும் 30-12-1952ல் ரத்து செய்யப்பட்டு விட்டன. (14-1-1953 தேதி கெஜட் பார்க்கவும்—இந்த இதழில் 'கண்ட்ரோல்' என்ற பகுதியைப் பார்க்கவும்.) இப்போது சென்னை ராஜ்யத்தில் வெல்லம் நாட்டுச் சர்க்கரை இவற்றை என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம். ஆனால் மேற்கண்ட கண்ட்ரோல் உத்தரவை அனுசரித்து மறுபடியும் இச் சரக்குகளுக்கு விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் சர்க்காரிடம் இருந்து வருகிறது. ஏனென்றால் 'ஜீனி-வெல்லக் கட்டுப்பாடு உத்தரவு' இன்னும் ரத்தாகவில்லை.

14. கேள்வி: (அமுர்தீன்—திருவையாறு) முஸ்லீம், 20 வயதுள்ளவர், 11-வயதுள்ள பெண்ணை விவாகம் செய்து கொண்டால், மணமகன், அவருடைய தகப்பனார், தாயார், நிக்காஹ்ரிஜிஸ்டரில் கண்ட சாட்சிகள் இவர்களைக் குற்றவாளிகளாகச் சேர்த்து, ரிஜிஸ்டர் செய்த நாட்டாண்மைக் காரரையும் நிக்காஹ் சொல்லிக்கொடுத்த காஜி இவ்விருவர்களையும் சாட்சிகளாக எடுத்துக்கொண்டால், இவ்விருவர் மீதும் குற்றமில்லாமல் நீங்கிவிடுமா?

பதில்: 1929 ஆம் வருடத்திய பாலிய விவாகத்தடைச் சட்டத்தின் செக்ஷன் 5இன் படி பாலிய விவாகத்தை நடத்துகிறவர்களும், அதில் பங்கெடுத்துக் கொள்ளுபவர்களும் கூடக் குற்றம் செய்பவர்கள் தான். குற்றம் நடந்த ஒரு வருடம் கடந்தபின் எந்தக் கோர்ட்டும் இக் குற்றம் பற்றிய பிராதை ஏற்றுக்கொள்ள அதிகாரமல்லை. குற்றம் செய்தவர்களுள் சிலர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டாலும் மேற்கண்ட காலாவதிக்குள் அவர்கள் மீதும் ஒரு தனி வழக்குத் தொடர சட்டப்படி யாதொரு தடையுமில்லை.

15. கேள்வி: (கோவிந்தசாமி மேல்வன்கைம் பாடி.) கடன் பட்டுவிட்டவிவசாயி ஒருவருக்கு நிலங்கள் இருக்கின்றன. மழை இல்லாமல் சில வருடங்களாக மாசூல் கிடைக்காமல் அவர் ஜீவனத்திற்கே கஷ்டமான நிலைமையில் இருந்தால் கடன்காரர் தொந்தரவை நிறுத்திவைக்கக் கவர்ன்மெண்டார் உதவி செய்வார்களா?

பதில்: விவசாயிகளுக்கு வேறு விதமான அனுகூலங்களை அளிக்கும் சட்டங்கள் இருக்கின்றன. உதாரணமாக, சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி, ஒரு விவசாயி வாங்கும் கடனுக்கு வட்டி குறைக்கப்பட்டும், சில சமயங்களில் அசலே குறைக்கப்பட்டோ ரத்து செய்யப்பட்டோ பரிகாரங்கள் அளிக்கப்படுகின்றன. விவசாயிகளுக்குச் சொந்தமான சில வகை சொத்துக்களை ஜப்தி செய்யக்கூடாதென்றும் சட்டம் இருக்கிறது. ஆனால் விவசாயிக்குக் கடன் கொடுத்தவர் சட்டப்படி கிடைக்கவேண்டிய தொகைக்கு விவசாயிமீது நடவடிக்கை முதலிய எடுத்து, 'தொந்தரவு' செய்யக் கூடாதென்ற சட்டம் ஒன்றும் இது வரையில் வரவில்லை.

16. கேள்வி: (ராம சுப்பிரமணியம்—மதுரை) இந்து ஒருவருக்குச் சகோதரியிட மிருந்து

சொத்துக்கள் கிடைத்தன. அவற்றில் தாமே விற்றவை போகப் பாக்கியை அவர் உயில் மூலம் தம் மனைவிக்குக் கொடுத்து விட்டார். அவருக்கு மற்றொரு சகோதரியின் ஆண் பெண் மக்கள் இருக்கிறார்கள். இவர்கள் யாருக்காவது அச் சொத்தில் பாத்தியம் உண்டா?

பதில்: இல்லை' உயில் எழுதியவருக்கு அச் சொத்து எப்படி, யாரிடமிருந்து கிடைத்ததென்று பார்க்க வேண்டியதில்லை. சொத்து அவருடையதாகி விட்டது. அதை அவர் தம் இஷ்டம்போல் யாருக்கும் உயில் மூலம் கொடுத்துவிட உரிமை உண்டு.

17. கேள்வி: (L 2890–மாடசாமி) ஒருவருக்குச் சொந்தமான நிலத்தில் எலி உபத்திரவத்தைப்போக்க (விஷ) மருந்து வைத்திருந்தார். வேறு ஒருவருடைய கோழி அங்கே வந்து அம் மருந்தைத் தின்று, கோழி இறந்து போய்விட்டால், கோழியின் சொந்தக்காரர், நிலக்காரர் மீது நஷ்ட ஈடு கேட்க முடியுமா?

பதில்: இது கொஞ்சம் சிக்கலான சட்டப்பிரச்னை. விசேஷ சந்தர்ப்பங்கள் எதுவும் இல்லாவிட்டால், இறந்த கோழியின் சொந்தக்காரருக்கு நிலக்காரர்மீது எவ்வித பரிகாரமோ, நஷ்ட ஈடோ கிடைக்காது. நிலத்தின் சொந்தக்காரர் தம்முடைய நிலத்திலிருக்கும் பயிரை நாசம் செய்யும் எலிகளைப்போக்க மருந்து வைத்தது சட்ட விரோதமல்ல. வேறு ஒருவருடைய கோழி அங்கே வந்தது தான் தவறு. ஆனால் மற்றவருடைய கோழிகள் தம்முடைய நிலத்தில் வந்து கொண்டிருக்கின்றன என்றும், அவை அம்மருந்தை கொரித்து அவை இறக்கக்கூடும் என்றும் தெரிந்தே அவர் மருந்து வைத்திருந்தாலும் சரி; அல்லது அக்கோழிகளுக்குத் தீனி இருப்பதுபோல் ஆசைகாட்டி அவற்றை உள்ளே இழுப்பதற்காக (Lure into the trap) அவர் மருந்து வைத்திருந்தாலும் சரி—அவர் செய்வது தவறாகும். அப்படி அவர் செய்திருந்தால் கோழிக்காரருக்கு அவர் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதாகும்.

சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டில் இது போன்ற ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. (62 லா வீக்லி–493). நீலகிரியில் முனிசாமி என்ற ஒருவர் உருளைக்கிழங்கு சாகுபடி செய்திருந்தார். (நிலத்திற்கு நாலு பக்கமும் வேலி அடைத்திருந்தார். அப்படி இருந்தும், பன்றிகள் உள்ளே நுழைந்து உருளைக் கிழங்குக்குச் சேதம் விளைவித்து வந்தன. இதைத் தடுக்க அவர் ஒரு உபாயம் செய்தார். வேலிக்கு உட்புறமாகப் பல இடங்களில் குழிகளை வெட்டி, அந்த இடங்களில் மட்டில் வேலியைக் கொஞ்சம் திறந்து வழிவைத்திருந்தார். பன்றிகள் இவ்வழியாக உள்ளே நுழைந்து குழிகளில் விழுந்து விடுமென்று நினைத்து அவர் இப்படிச் செய்தார். அடுத்த தோட்டக்காரர் பாரிங்டன் என்ற துரை. அவரிடம் ஒரு பசு இருந்தது. இது முனிசாமிக்குத் தெரியக்கூடத் தெரியாது. இப்பசு எல்லை தாண்டி முனிசாமியின் சொல்லைக்குள் நுழைந்து குழி ஒன்றில் விழுந்து மாண்டு விட்டது. பாரிங்டன் துரை இதற்கு நஷ்ட ஈடு கேட்டுத் தாவா செய்தார். கீழ்க்கோர்ட்டில் அவருடைய தாவா தள்ளப்பட்டது. சென்னை ஹைகோர்டிலும் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பே உறுதி செய்யப்பட்டது. பாரிங்டன் துரையினுடைய பசுவைத் தம் கொல்லைக்குள் அழைக்கும் விதம் முனிசாமி ஆசை காட்டி உள்ளே அப்பசுவை இழுத்திருந்தால்தான் (Lured into the trap) அவர் அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு ஜவாப்தாரி ஆவார் என்றும், அவர் அப்படிச் செய்யவில்லை என்றும் உயர் நீதிபதி ஹார்வில் அவர்கள் இத் தீர்ப்பில் சட்ட விளக்கம் செய்திருக்கின்றனர்.

18. கேள்வி: (சந்தா நெ. 9507) (1) பஞ்சாயத்துக்குத் தன் கட்டடத்தை வாடகைக்கு விட்டிருக்கும்ஒருவர் பஞ்சாயத்து உறுப்பினர் தேர்தலுக்கு நிற்கலாமா? (2) கட்டடம் தனக்குப் பாத்தியப்பட்டிருக்க, தான் பதவி வகிக்கும் பஞ்சாயத்துக்கே அதை வாடகைக்கு விட்டு, பிரிவினையாகாத தனது மகனைக் கொண்டு ரசீது கொடுத்து வாங்கி வருவது சட்டப்படி முறையா?

பதில்: (1) நிற்கலாம் பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 16 (2) (c) படி பஞ்சாயத்துடன் ஒப்பந்தம் செய்தவர்கள் பஞ்சாயத்து அங்கத்தினராக வாக்கூடதென்றும், ஆனால் இதற்கு விதி

விலக்கு அளித்துச் சர்க்கார் விதிகள் செய்யலாமென்றும் இருக்கிறது. இதை அனுசரித்து, சர்க்கார் விதிகள் செய்திருக்கின்றனர். (27-3-1951 சென்னைச் சர்க்கார் கெஜட்-பாகம் I ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 40 பார்க்கவும்) இவ் விதிகளின்படி பஞ்சாயத்துடன் வாடகை ஏற்பாடு செய்துகொண்டிருப்பவர்கள் அங்கத்தினர்களாக நிற்கத் தடை இல்லை என்று விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (2) பிரிவினையாகாத குடும்பத்தில் மகனுக்கும் வீட்டில் பாத்தியமிருப்பதால், மகனே ரசீது கொடுத்து வாடகை வாங்க உரிமை இருக்கிறது. இதில் சட்டப்படி முறைப் பிசகு ஒன்றுமில்லை.

19. கேள்வி: (L 2879) ஒருவர் ஒரு தமிழ்ப் பத்திரிகையும் அத்துடன் ஒரு குறுக்கெழுத்துப் போட்டியும் இந்தியா பூராவும் நடத்த விரும்பினால் என்ன செய்ய வேண்டும்?

பதில்: தமிழ் பத்திரிகை நடத்த அச்சகச்சட்டப்படி (Press and Registration of Books Act 7186) பத்திரிகை அச்சிடுபவரும், பிரசுரிப்பவரும் மாஜிஸ்ட்ரேட் முன் பதிவுசெய்துகொள்ள வேண்டும். குறுக்கெழுத்துப் போட்டி ஆரம்பிக்கத் தனியாகச் சட்டமோ லைசென்ஸ் வாங்கவேண்டுமென்ற விதிகளோ சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்டவரையில்இப்போது இல்லை. ஆனால் குறுக்கெழுத்துப் போட்டி நடத்துவதில் மோசடிகள் இருந்தால் பொதுச் சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

20. கேள்வி: (L. 1347—பர்கதுல்லா—பாலக்காடு) ஒரு முஸ்லீம் உயிருடன் இருக்கும் போதே தனது காலஞ்சென்ற முதல் இரண்டு மனைவிகளின் மூன்று பிள்ளைகளில் மூத்தவருக்கு எதுவும் கொடுக்காமலும், இரண்டாவது மகனுக்குச் சிறிது ரொக்கம் மட்டில் கொடுத்தும் மூன்றாவது மகனுக்குச் சட்டப்படி சேர வேண்டிய பாகம் கொடுக்காமல் கொஞ்சம் சொத்தை மாத்திரமும் கொடுத்தும் விடுதலை வாங்கிக் கொண்டார். உயிருடன் இருக்கும் மனைவிக்கும் அவள் பிள்ளைகளுக்கும் அதிகமான சொத்துக்களை கிரயமே செய்தும் ரொக்கம் கொடுத்தும், பிறகு ஷை முஸ்லீம் இறந்து விட்டார். முதல் மூன்று மகன்கள் இறந்த தகப்பனுடைய சொத்துக்களில் திரும்பப்பாகம் கேட்க முடியுமா?

பதில்: முடியாது. ஒரு முஸ்லீம் உயிருடன் இருக்கும்போது அவருடைய சொத்துக்களில் அவரது மக்களுக்கு எவ்வித உரிமையுமில்லை. அவர் இருக்கும்போதே, யாருக்கு எவ்வளவு சொத்துக்களைக் கொடுத்தபோதிலும் அதை எவரும் ஆட்சேபிக்க முடியாது. இந்துச் சட்டத்தில் தான் தகப்பனிடம் இருக்கும் பூர்வீகச் சொத்தில் தகப்பன் உயிருடன் இருக்கும் போதே ஆண் மக்களுக்கும் சம உரிமை உண்டு. இஸ்லாமியச் சட்டம் அப்படி அல்ல.

21. கேள்வி: (L, 1918—பொன்னம்பலம்—கிறிஸ்தியாநகரம்) ஒரு முஸ்லீமுக்கு ஒரு சகோதரரும் மூன்று சகோதரிகளும் இருக்கிறார்கள். இவர் சுமார் 6 வருடங்களுக்கு முன் தம் தகப்பனாரிடம் கொஞ்சம் தொகை பெற்றுக் கொண்டு, தகப்பனாரின் சொத்துக்களில் தமக்குக் கிடைக்கக்கூடிய பாகத்தைத் தகப்பனாருக்கே விடுதலைப் பத்திரம் எழுதி, ரிஜிஸ்டர் செய்து கொடுத்து விட்டார். அதில் தகப்பனாரும் சாட்சிக் கையெழுத்துச் செய்திருக்கிறார். அதன் பின் ஷை விடுதலை கொடுத்த மகன் தம் சுயார்ஜிதமாய் நிறையச் சொத்துச் சம்பாதித்திருக்கிறார். தகப்பன் இறந்துவிட்டார். விடுதலை கொடுத்தவரின் சகோதர சகோதரிகள் விடுதலைப்பத்திரம் செல்லாதென்றும், அவர் சுயார்ஜிதமாகச் சம்பாத்தியம் பண்ணிய சொத்துக்களும் குடும்பத்தைச் சேர்ந்தது தான் என்றும் ஆகவே அவைகளிலும் தங்களுக்கு உரிமை உண்டு என்றும் கேட்டால் அவர்களுக்குச் சட்டப்படி பாத்தியம் உண்டா?

பதில்: இல்லை. தகப்பனார் இருக்கும்போது அவருடைய சொத்தில் மகனுக்கு எவ்விதமான பாகமும் கிடைக்காது. மகனிடம் விடுதலைப் பத்திரம் வாங்க அவசியமே இல்லை. அதைப் போலவே, மகன் சம்பாதிக்கும் சொத்தில் அவருடைய சகோதர சகோதரிகளுக்கு எவ்விதபாத்தியமுமில்லை. சுயமாகச் சொத்துச்

சம்பாதித்த மகன் ஏற்கனவே விடுதலை கொடுத்திருந்தாலும் கொடுக்காவிட்டாலும் சட்டம் ஒன்றுதான்.

22. கேள்வி: (L. 2169—வெங்கட கிருஷ்ணய்யர்—வெள்ளூர்.) ஒரு ஹிந்து விவசாயி குடும்பத்தில் ஒருவருக்கு நான்கு ஆண் மக்களும் ஒரு பெண்ணும் உண்டு. பெண்ணுக்குக் கலியாணம் ஆகிவிட்டது. குடும்பத் தலைவரான தகப்பனால் குடும்ப விவசாய விஷயங்கள் பார்க்க முடியாத நிலைமையில் ஷை யாரின் மேஜரான மூத்தமகனால் விவசாயம் முதலிய குடும்ப மானேஜ்மெண்டுகள் பூராவும் பார்க்கப் பட்டு வரும்போது, ஷை மூத்தமகனால் குடும்பச் செலவுக்காகவும், விவசாயச் செலவுக்காகவும் புரோநோட்டுக்கள் மூலம் வாங்கப்பட்ட கடன்கள் இருக்க, மற்றச் சகோதரர்களும் மைனர்களாக இருக்கும்போது அவர்கள் பாகம் பிரித்துக் கொண்டால், ஷை மூத்த மகன் பட்ட கடன்கள் மைனர்களையும் தகப்பனையும் கட்டுப்படுத்துமா?

பதில்: பாகப்பிரிவினைக்கு முன்பு குடும்ப மானேஜரான மூத்த மகன் குடும்பச் செலவுக்காகவும் குடும்ப அவசியமான சங்கதிகளுக்காகவும் பட்ட கடன்கள் தகப்பனையும் மற்றச் சகோதரர்களையும் கட்டுப்படுத்தும். அவ்விதக் கடன் கொடுத்தவர்கள், எல்லோருடைய பாக சொத்தையும் கட்டுப்படுத்தி டிக்ரி வாங்கலாம்.

23. கேள்வி: (L. 2266. முகமதுயாகூப்—பவானி.) ஒரு முஸ்லீமுக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் பொதுவான பிரிவினையாகாத வீடு மட்டில் இருக்கிறது, அம் முஸ்லீம் இறந்து விட்டார். அவருக்கு மகன் மகள்கள் உண்டு. அம் முஸ்லீம் பட்ட கடன்களுக்காக (a) அவருடைய மக்கள் மீது கடன்காரர்கள் தாவா செய்ய முடியுமா? (b) பிரிபடாமலிருக்கும் மேற்கண்ட வீட்டை அக்கடன்காரர்கள் பெறும் டிக்ரிகளுக்காக ஜப்தி செய்ய முடியுமா? (c) வீடு, கோர்ட் மூலம் விற்பனையாகியும் கடன் பாக்கி இருந்தால் இறந்தவருடைய மக்களிடம் இருக்கும் ஜங்கம சொத்துக்களின் மீது தொடர டிக்ரிக்காரர்களுக்கு உரிமை உண்டா?

பதில்: (a) முடியும் (b) முடியும். பிரிபடாத வீட்டில் கடன்பட்டவருடைய வீதத்தை ஜப்தி செய்யலாம் (c) ஜங்கமசொத்துக்களும் கடன் பட்ட தகப்பனுடைய சொத்துக்களாக இருந்து அவர் இறந்த பிறகு அவை வார்சுகளிடம் இருந்தால், அவற்றையும் ஜப்தி செய்ய டிக்ரிக்காரருக்கு உரிமை உண்டு.

24. கேள்வி: (L 2366—இராஜகுருநாதன்—இளம்பள்ளி) 1950–ஆம் வருடத்திய 10–ஆவது பஞ்சாயத்துச் சட்டம் செக்ஷன் 82 ஸப் செக்ஷன் (3) a படி ஸ்தாபித்து நடந்து வரும் சொந்த மார்கெட்டுகளைத் தொடர்ந்து நடத்திவரலாம், அதைப் பஞ்சாயத்து நடத்தக் கூடாதென்று கூற அதிகாரம் உண்டா? குறிப்பு ஷை மார்க்கெட்டின் வரும்படி செக்ஷன் 81-ல் குறிப்பிட்ட காரியங்களுக்குச் செலவிடப்படாமல் சொந்த உபயோகத்திற்கு உபயோகப்படுத்தப் பட்டு வருகிறது.

பதில்: இவ்வித மார்க்கெட்டுக்களை மூடி அவற்றைப் பஞ்சாயத்துக்களே நடத்தவேண்டியது செக்ஷன் 81 (3) இன்படி பஞ்சாயத்துக்களின் கடமையாகும்.

25. கேள்வி: (பெரீஸ்—திருச்செந்தூர்) பஞ்சாயத்து மெம்பர்களின் பதவிக்காலம் 2-1-1953ல் காலாவதியானதை 1-4-1953 வரை அல்லது அதற்கு முன் தேர்தல் நடைபெற்றால் தேர்தல் நடை பெறும்வரை நீடித்திருப்பதாகச் சர்க்கார் அறிவித்திருக்கின்றனர். பஞ்சாயத்து மெம்பர் பதவி 1-4-53வரை நீடித்திருக்கும்போது அதேமெம்பர் புதிய எலெக்ஷனில், தான் மெம்பராகவோ பிரசிடெண்டாகவோ நிற்க உத்தேசித்தால் இப்போதிருக்கும் மெம்பர் ஸ்தானத்தை ராஜீனமா செய்து விட்டுத் தான் நாமினேஷன் போடவேண்டுமா; அல்லது மெம்பர் ஸ்தானம் தானாக நீங்கிவிடுமா? ராஜீனமா செய்யவேண்டுமென்பது சட்டமாக இருக்குமாகில், நாமினேஷனுக்கு எத்தனை நாளுக்கு முன்பு ராஜீனமா செய்யவேண்டும்?

பதில்: பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 16 (2) (f) ஷரத்துப்படி—இப்போதிருக்கும் மெம்பர்களும் ராஜீனமா செய்யாமல் தேர்தலுக்கு நிற்க தடை ஒன்றுமில்லை. ஏனென்றால் எல்லா ஸ்தானங்களுக்கும் நடத்தப்படும் இத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் எந்தத்தேதி முதல்

பதவி வகிக்கவேண்டுமோ, அதற்கு முன்ன தாகவே இப்போதிருக்கும் பதவி போய்விடும் புதிய பதவி என்று முதல் அமுலுக்கு வரவேண்டுமோ, அதற்குப் பிறகும் இப்போதிருக்கும் பதவிக்காலம் நீடிப்பதாக இருக்கும் மெம்பர்கள் தான் புதிய தேர்தலில் நிற்கக்கூடாது. இவ்விதி உபத் தேர்தல் சமயத்தில்தான் பொருந்தும்.

26. கேள்வி: (சுப்பிரமணியம்—அறந்தாங்கி) தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமுலில் உள்ள ஒரு கிராமத்தில் ஒருவருக்கு ஒரு வேலிக்குட்பட்ட நிலம் இருக்கிறது. அதை வார சாகுபடிக்கு விட்டிருக்கிறார். இப்போது நிலத்தைத்தாமே சாகுபடி செய்ய வேண்டுமென்றோ, வேறு ஒருவருக்கு குத்தகைக்கு விடவோ, வாரசாகுபடிக்கு விடவோ இஷ்டப்பட்டால் என்ன செய்யவேண்டும்.

பதில்: தஞ்சை ஜில்லாவில் ஒருவருக்கு ஒரு கிராமத்தில் நஞ்சை ஒரு வேலிக்கோ, புஞ்சை மூன்று வேலிகளுக்கோ அதிகப்படாமல் நிலம் இருந்தால் அந்நிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில் தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கிடையாது. அதாவது அவ்வித நிலங்களைக் குத்தகைக்கு வைத்திருப்பவர்களுக்கும் சரி வார சாகுபடி செய்பவருக்கும் சரி, பண்ணையாட்களுக்கும் சரி, அச் சட்டத்தில் கண்ட அனுகூலங்களோ சலுகைகளோ ஒன்றும் கிடைக்கமாட்டா. ஆகையால் அவ்வித நிலங்களை இப்போது வாரசாகுபடி செய்பவரை நிலக்காரர் இப்பசலியுடன் மாற்றி வேறு ஏற்பாடு செய்யலாம். அவர் நிலத்தைவிட மறுத்தால் நிலம் சுவாதீனம் கிடைக்க சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். அவ்வித நிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில் புதிய தஞ்சைச்சட்ட சமரச அதிகாரிக்கோ, ரிவின்யூ கோர்ட்டுக்கோ எவ்வித அதிகாரமுமில்லை.

27. கேள்வி: (சின்னசாமி—மூகவூர்) இந்து தகப்பன் சுமார் 20 வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். அவருக்கு ஆண்மக்கள் மூன்று பெயர்கள். இவர்களுடைய தாயாருக்கு அன்ன வஸ்திரத்திற்காக நிலம் ஒதுக்கி விட்டு மீதியை சகோதரர்கள் பங்கு செய்து கொண்டார்கள். ஆண் மக்களில் முதல் இருவரும் ஆண் சந்ததி வைத்துவிட்டு இறந்துபோன பிறகு தாயார் இறந்தாள். தாயிடம் இருந்த சொத்துக்கு உயிருடன் இருக்கும் அவளுடைய மூன்றாவது மகன் மட்டில் வார்சா, அல்லது இறந்த மகன்களின் மகன்களுக்கும் பாத்திய முண்டா?

பதில்: மூன்று கிளைகளுக்கும் சமப்பங்கு உண்டு. அதாவது அச்சொத்தில் இறந்த மூத்த மகனின் ஆண்மக்களுக்கு ஒரு பங்கு; இறந்த இரண்டாவது மகனின் ஆண்மக்களுக்கு ஒரு பங்கு; உயிருடன் இருக்கும் கடைசி மகனுக்கு ஒரு பங்கு.

எங்கும் புகழ் பெற்ற அற்புத சஞ்சீவி

"ஜெயராம்" காயசுத்தி லேகியம் (Regd. No. 138512)

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினமும் உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயற்றுப்பிசம், வயற்றுவலி, இடுப்புவலி, கைகால் வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டிய சுரம், மூலரோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்

1 சேர் ரூ. 4-8-0 ½ சேர் ரூ. 2-4-0

வி. பி. பி. செலவு தனி

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்

தயாரக்குமிடம்:— **ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிஸ்வநாதர் கிழவீதி, கும்பகோணம்.**

சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டம் – 1950

[The Madras Village Panchayats Act—1950. 1950-ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 15—7—50-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]

சென்ற மாத இதழில் 'பஞ்சாயத்து நிதி' என்பதில் எந்த எந்தத் தொகைகள் சேர்ந்தன என்பது பற்றிய பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 70-ல் குறிப்பிடப் பட்டிருக்கும் 22 வகை வருமானங்கள் விளக்கப்பட்டன. இவை தவிர இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்களுக்கு மட்டில் இன்றும்ஒரு வருமானமும் இருக்கிறது. அது என்ன என்பதைக் கவனிப்போம்,

இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக் களுக்குச் சர்க்காரால், 'கிராண்ட்' கொடுக்கப்படும்.

செக்ஷன் 71

ஒவ்வொரு வருடமும் இந்த ராஜ்யத்தில் சர்க்காரால் வசூலிக்கப்படும் தண்ணீர்த் தீர்வை உள்பட மொத்த நில வரித் தொகையில், $12\frac{1}{2}$ சத விகிதமுள்ள தொகையை அந்த வருடத்தில் எல்லா இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்களுக்கும், அந்தந்தப் பஞ்சாயத்தின் ஜனத்தொகையின் பேரில் விகிதாசாரமாக, 'கிராண்டாக' கொடுக்கப்படும். இதற்காக விதிகள் செய்யப்படும். ஆனால் பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் வருடத்திலும் அதற்கு அடுத்த வருடத்திலும் மேற்கண்டபடி தண்ணீர்த் தீர்வை உள்பட நில வரித்தொகையில் $12\frac{1}{2}$ சதவிகிதத்திற்கு மேற்படாமல் சர்க்காருக்கு யுக்தமாகத் தோன்றும் தொகையை பட்டில் அந்தந்தப் பஞ்சாயத்துக்கு 'கிராண்ட்' டாகக் கொடுக்கச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. மேலும் எந்த வருடத்திலும் டிசம்பர் 31 ஆம் தேதிக்குப் பின்பு முதல் முதலாக அமைக்கப்படும் இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்களுக்கு அவ்வருடத்திற்கு மட்டில் மேலே கண்ட கிராண்டுத் தொகை கொடுக்கப்பட மாட்டாது.

1952 ஆம் வருடத்திய 12-வது பஞ்சாயத்துத் திருத்தச் சட்டம்

விவரணம் :- 'நிலவரி' என்பதில் ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டப்படி சர்க்காரால் வசூலிக்கப்படும் எல்லாத் தொகைகளும் சேரமாட்டா. எற்கனவே ஜமீன் இனும் கிராமங்களுக்குக் கொடுக்கப்படவேண்டியதாக இருந்த பேஷ்குஷ், குவிட்ரெண்டு, ஜோடி அல்லது அதுபோன்ற தொகைகள் எவ்வளவோ அவ்வளவுதான் சேரும். மேற்கண்ட தொகைகளுக்கு மேல் வசூலாகும் அதிகத் தொகைகள் ஜமீன்தார்களுக்கும் இனும்தார்களுக்கும் அச்சட்டப்படி கொடுக்கப்பட வேண்டிய நஷ்டஈட்டுத் தொகைகளுக்காகத் தேவையாக இருப்பதாகச் சர்க்காருக்குத் தோன்றும் வரை, 'நிலவரி' என்ற கணக்கில் அவை சேர்த்துக் கொள்ளப் பட மாட்டாது.

பஞ்சாயத்து நிதித் தொகையை எந்தெந்தக் காரியங்களுக்காக செலவு செய்யலாம்?

(1) இச்சட்டத்திலோ, விதிகளிலோ, அல்லது வேறு சட்டங்களிலோ, விதிகளிலோ பஞ்சாயத்துக்கள் எந்த எந்தக் காரியங்களைக் கட்டாயமாகச் செய்யவேண்டுமென்றோ, அல்லது யுக்தப்போல் செய்யலாமென்றோ குறிப்பிடப் பட்டிருக்கிறதோ அக் காரியங்களுக்காகப் பஞ்சாயத்து நிதியைச் செலவு செய்யலாம். சர்க்காரால் இது விஷயமாகச் செய்யப்படும் விதிகளையும் விசேஷ உத்தரவுகளையும் அனுசரித்து, அத்தொகைகள் அந்தந்தக் கிராமத்திற்குள்ளேயே ஷை காரியங்களுக்காகச் செலவு செய்யப்படவேண்டும். இச்சட்டத்திலோ அல்லது இன்ஸ்பெக்டராலோ அனுமதிக்கப்பட்டிருந்தால் மட்டில் கிராமத்திற்கு வெளியேயும் ஷை காரியங்களுக்காகப் பஞ்சாயத்து நிதியைச் செலவு செய்யப் பஞ்சாயத்துக் களுக்கு உரிமை உண்டு.

செக்ஷன் 72

(2) (a) அடியிற்கண்ட தொகைகளைச் செலுத்த ஏற்பாடு செய்யவேண்டியது பஞ்சாயத்தின் கடமையாகும்:-

(i) அப் பஞ்சாயத்தால் வாங்கப்பட்ட கடன்கள்.

(ii) அப்பஞ்சாயத்தின் தேர்தலுக்காக வாக்காளர் ஜாப்தா தயார் செய்யவும், அதைத் திருத்தவும், தேர்தல் நடத்தவும், தேர்தல் சிப்பந்திகளை வைத்திருப்பதற்காகவும் ஏற்படும் எல்லாத் தேர்தல் செலவுகள்.

விவரணம்: 'தேர்தல் சிப்பந்திகளை வைத்திருப்பது'-என்பதில் தேர்தல் ஜாப்தா தயார் செய்யவும், அதைத் திருத்தவும், தேர்தல் நடத்தவும் அமர்த்திக் கொள்ளப்படும் சர்க்கார் அல்லது வேறு உத்தியோகஸ்தர்கள் சிப்பந்திகள், இவர்களுடைய சம்பளம் பென்ஷன், லீவுச் சம்பளம் இவை சேர்ந்தவையே.

(iii) அப் பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர்கள், சிப்பந்திகள், இவர்களுடைய சம்பளம், அலவன்ஸ், பென்ஷன், பென்ஷன் அல்லது பிராவிடெண்ட் பண்டுக்காகக் கொடுக்கப்படும் சகாயத் தொகைகள்.

(iv) கோர்ட் டிக்ரி அல்லது உத்தரவுப்படி அப் பஞ்சாயத்து, கொடுக்கவேண்டியதாக ஏற்படும் தொகைகள்.

(v) இச் சட்டத்தாலாவது வேறு சட்டத்தாலாவது கட்டாயமாக்கப் பட்ட செலவுகள்.

(b) ஒவ்வொரு வருடமும் மேலே (ii) உட்பிரிவில் கண்ட தேர்தல் செலவு எவ்வளவு என்று சர்க்காரால் நிர்ணயம் செய்யப்படும். இது முடிவானது. சர்க்காரின் முடிவை எந்த பஞ்சாயத்தும் ஆட்சேபிக்க முடியாது. மேலும் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய கடன்கள், செக்ஷன் 44, 46 (2) இவற்றில் கண்ட செலவுகள் இவைகளுக்கு அடுத்தபடியாகத் தேர்தல் செலவுகள் மற்றச் செலவுகளுக்கு முன்னதாகக் கொடுக்தப்பட வேண்டிய செலவு இனமாகும்

(3) சர்க்காரின் அனுமதி பெற்றுக் கொண்டு இந்தியாவின் தற்காப்புக்கான எந்த நிதிக்கும் எந்த பஞ்சாயத்தும் சகாயப் பணம் கொடுக்கலாம்.

(4) இன்ஸ்பெக்டருடைய அனுமதியின் பேரில் எந்தப் பஞ்சாயத்தும் (i) அக்கிராமத்தில் நடக்கும் எந்தப் பொதுக் காட்சிக்கும், வைபவத்திற்கும், கொண்டாட்டத்திற்கும் தொகை கொடுத்துச் சகாயம் செய்யலாம்; (ii) எந்தத் தர்ம நிதிக்கும், ஏழைகளுக்கும் உதவி செய்யும் ஸ்தாபனங்களுக்கும் வியாதியஸ்தர் களுக்குச் சிகிச்சை செய்வதற்காகவும் வியாதிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்தாபனங்களுக்கும் பண உதவி செய்யலாம்; (iii) விசேஷ செலவுகளும் செய்யலாம்.

வீட்டு வரி பற்றிய விதிகள்

பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 64 (4)-ல் கண்டிருக்கும் அதிகாரங்களை உப யோகித்து ("வக்கீல்" - 1952 டிசம்பர் இதழ் - பக்கம் 24 பார்க்கவும்) சென்னைச் சர்க்காரால் வீட்டு வரி விதிப்பது பற்றிச் சில விதிகள் இயற்றப் பட்டிருக்கின்றன.

சில வகைக் கட்டடங்களுக்கு வீட்டு வரி கிடையாது

கீழே கண்ட கட்டடங்களுக்கு இச்சட் டப்படி வீட்டு வரி விதிப்பதிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டிருக் கிறது. அவையாவன :-

27—3—1951 சென்னைச்சர்க் கார் கெஜட் - ரூல் சப்ளி மெண்ட்பாகம் I A பக்கம் 49

(a) பொது மக்கள் கடவுள் வழிபாட்டுக்காக ஒதுக்கப்பட் டிருக்கும் (கோயில், மசூதி, மாதாகோயில் போன்ற) கட் டடங்கள், அதற்காக உபயோகிக்கப்பட்டு வந்தாலும் சரி, வேறு எவ்விதமான காரியங் களுக்காக உபயோகிக்கப் படாமலிருந் தாலும் சரி; (b) வாடகை வசூலிக்கப்படாத தர்ம சத்திரங்கள்; அல்லது வாடகை வசூல் செய்யப்பட்டால், அவ்வாடகை பூராவும் தர்ம விஷயங்களுக்காகவே உபயோகிக்கப்பட்டு வரும் சத்திரங்கள். (c) கல்வி சம்பந்தமாக உபயோகிக்கப்படும் கட்டடங்கள், அவை களைச் சேர்ந்த 'ஹாஸ்டல்'கள் அல்லது மாணவர்கள் சாப்பிடுவதற்காக உபயோகிக் கப்படும் கட்டடங்கள்; பொது மக்களுக் கான நூல் நிலையக் கட்டடங்கள்; திக்கற்ற வர்களோ, கால்நடையோ தங்குவதற்காக உபயோகிக்கப்படும் கட்டடங்கள், (d) புரா தனச் சின்னப் பாதுகாப்புச் சட்டப்படி, காப்பாற்றப்பட்டு வரும் புராதனக் கட்ட டங்களும், அவற்றின் பாகங்களும் - இவை ஜாகைகளாகவோ, காரியாலயங்களாகவோ உபயோகிக்கப் படாமலிருந்தால். (e) தர்ம வைத்திய சாலைகள் (ஆஸ்பத்திரிகள்); வேறு தர்ம காரியங்களுக்காக மட்டில் உபயோகிக் கப் பட்டு வரும் மற்றக் கட்டடங்கள். (f) சர்க்காரால் குறிப்பிடப்படும் ரயில்வே ஆஸ்பத்திரிகள். (g) பஞ்சாயத்துக்கே சொந்தமான கட்டடங்கள். (h) லைட்ஹவுஸ் கட்டடங்கள், இவைகளுக்கு வீட்டு வரி கிடையாது. ஆனால் மேலே (a) (c) (e) ஷரத்துக்களில் கண்ட கட்டடங்களை அக் காரியங்களுக்காக உபயோகித்து வருபவர் கள் அவற்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தால், இவ்விதி விலக்கு கிடை யாது. மேலும் பள்ளிக்கூடம் காலேஜ் இவைகளைச் சேர்ந்த (ஹாஸ்டல் நீங்கலாக மற்ற) கட்டடங்களோ, ஆஸ்பத்திரி, நூல் நிலையங்கள் இவைகளைச் சேர்ந்த கட்டடங் களோ, வசிப்பதற்கான வாசஸ்தலமாக உப யோகிக்கப்பட்டு வந்தாலும் மேலே கண்ட விதி விலக்குக் கிடையாது.

ஒரு வீட்டின் வாடகை மதிப்பையோ, விலை மதிப்பையோ எப்படி நிர்ணயம் செய்வது?

விலை மதிப்பின் பேரில் ஒரு வீட்டுக்கு வீட்டுவரி விதிக்கப்பட வேண்டியிருந்தால், அம்மதிப்பைக் கீழே கண்டபடி நிர்ணயம் செய்யவேண்டும். அதாவது கீழ் நிலத்தின் விலை, அவ்வீடு இப்போது கட்டவேண்டி யிருந்தால் அதற்கு என்ன செலவாகும் என்று கணக்குச்செய்து இவ்விரண்டு இனங்களின் மொத்தத் தொகைதான் அவ்வீட்டின் விலை மதிப்பாகும். ஆனால் வீடுகட்டுவதற்கான செலவில், 10 சத விகிதத்திற்குக் குறை யாத நியாயமான தொகையைப் பழுதுக்காக நீக்கிக் கணக்குச் செய்ய வேண்டும். யந்திரங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் இவைகளின் கிரயத்தை நீக்கி மேற்கண்ட மதிப்பை நிர்ணயம் செய்யவேண்டும்.

வாடகை மதிப்பின்பேரில் ஒரு வீட்டுக்கு வீட்டுவரி விதிக்கப்பட வேண்டியிருந்தால், அம்மதிப்பைக் கீழேகண்டபடி கணக்குச் செய்யவேண்டும். அதாவது அவ்வீட்டை மாத வாடகைக்கோ, வருட வாடகைக்கோ விட்டால் ஒரு வருடத்திற்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய வாடகைத் தொகையில், பழுது பார்ப்பது இன்னும் மற்ற எல்லாச் செலவுகளுக்குமாக அதில் 10 சதவிகிதம்

கிக்கி, பாக்கி இருக்கும் தொகைதான் அவ் வீட்டின் வருட வாடகை மதிப்பாகும். சர்க்கார், ரயில்வே இவர்களுக்குச் சொந்த மான கட்டிடங்களுக்கும், சாதாரணமாய் வாடகைக்கே விடப்படாமலும் வாடகை மதிப்பை நிர்ணயம் செய்ய முடியாதென்று நிர்வாக அதிகாரிக்குத் தோன்றும் கட்டி டங்களுக்கும், அக் கட்டடங்களின் விலை மதிப்பின் 6 சத விகிதத் தொகையேதான் வருட வாடகை மதிப்பாகப் பாவிக்கப்படும்.

(குறிப்பு: ஒரு பஞ்சாயத்தானது 'விலை மதிப்பி'ன் பேரிலோ, 'வருட வருமான மதிப்பி'ன் பேரிலோ ஏதாவது ஒன்றை ஆதாரமாக வைத்துக் கொண்டு வீட்டுவரி விதிக்கலாம் — "வக்கீல்" - 1952 — டிசம்பர் இதழ்-பக்கம் 24 பார்க்கவும்.)

யார் வீட்டு வரி செலுத்த வேண்டும்?

ஒவ்வொரு அரை வருடம் ஆரம்பமான தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் வீட்டின் சொந்தக்காரர் வீட்டு வரியைக் கட்டக் கடமைப் பட்டவர்.

வீட்டு வரியைக் கட்டும்படி வீட்டின் சொந்தக்காரருக்கு நோட்டீசு கொடுக்கப் பட்ட 15 நாட்களுக்குள் அவர் வீட்டு வரி யைக் கட்டாமல் பாக்கி வைத்துக் கொண் டிருந்தால், 12 மாதங்களுக்குள், அவ்வீட் டில் குடியிருப்பவர் அல்லது அதில் தாற் காலிகமாக வசிப்பவருக்குப் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி நோட்டீசு கொடுத்து அவ் வரியை 15 நாட்களுக்கு அதிகமான ஒரு கெடுவுக்குள் செலுத்தும்படி கேட்க உரிமை உண்டு.

வீடு பராதீனம் செய்யப்பட்டால்

வீட்டு வரி கொடுக்க வேண்டியவர் வீட்டை வேறு ஒருவருக்குப் பராதீனம் செய்தால், பத்திரத் தேதியிலிருந்தோ, அது ரிஜிஸ்டரான தேதியிலிருந்தோ, அல்லது பத் திரமே இல்லாமல் பராதீனம் செய்யப்பட் டால் பராதீனம் ஏற்பட்ட தேதியிலிருந்தோ 3 மாதங்களுக்குள் இது விஷயத்தைப் பஞ் சாயத்து நிர்வாக அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டியது பராதீனம் செய்பவர் வாங்கு பவர் இருவருக்கும் கடமை ஆகும். வரி கொடுக்க வேண்டியவர் இறந்துவிட்டால் வீட்டை அடையும் வார்சு ஒரு வருடத்திற் குள் தெரிவிக்க வேண்டும். பாத்தியங்கள் சம்பந்தமான தஸ்தவேஜுகளைத் தாக்கல் செய்யும்படி கேட்க நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு. இவ்விதியின்படி வீட்டின் பாத்தியம் மாற்றப்பட்ட விஷயம் பஞ்சா யத்தின் நிர்வாக அதிகாரிக்கு அறிவிக்கப் படாவிட்டால், புதிதாகச் சொத்து அடை பவர் வீட்டு வரி கொடுக்க கடமைப்பட் டிருப்பது தவிர, பழைய சொந்தக்காரரின் பொறுப்பும் நீங்காமல், அப்படியே இருக் கும்.

ஏழ்மை காரணமாக வீட்டு வரி விதி விலக்கு

அக் கிராமத்தில் இருக்கும் ஒருவருடைய ஏழ்மை காரணமாக அவர் கொடுக்க வேண் டிய வீட்டு வரி முழுவதையுமோ ஒரு பாகத் தையோ வஜா செய்யப் பஞ்சாயத்துக்கு உரிமை உண்டு. அதேபோல் குறிப்பிட்ட வகை வீடுகளுக்கு வரி இல்லாமல் விதி விலக்கு அளிக்கப் பிரதேச இன்ஸ்பெக்டருக் கும் அதிகாரம் உண்டு. ஏழ்மை காரண மாக ஒரு தடவையில் ஒரு வருடத்திய வரி யைத்தான் பஞ்சாயத்து வஜா செய்யலாம்.

வீடு காலியாக இருந்தால்

ஒரு அரை வருடத்தில் 60 அல்லது அதிக நாட்கள் ஒரு வீடு காலியாக இருந்தால், விதாசாரமான வரியை, பாதிக்கு மேற்படா மல், வஜா செய்யப் பஞ்சாயத்து நிர்வாக அதி காரிக்கு அதிகாரம் உண்டு. வஜா கேட்கும் மனு அதே அரை வருடத்திலோ, அதற்கடுத்த அரை வருடத்திலோ போடப்பட வேண்டும் பிறகு வஜா கேட்க முடியாது. வீடு காலியாக இருப்பது பற்றி, எந்தத்தினம் வீட்டின் சொந்தக்காரரோ அவருடைய ஏஜண்டோ நிர்வாக அதிகாரிக்கு நோட்டீசு கொடுக்கி றாரோ அது முதல்தான் வீடு காலியாக இருக்கும் நாட்கள் கணக்குச் செய்யப்படும். ஒவ்வொரு அரை வருடத்திற்கும் இவ்வித நோட்டீசு தனித் தனியாக கொடுக்கப்படக் வேண்டும்.

(தொடரும்)

உங்கள் தீர்ப்பு என்ன?

சீதாராமைய்யாவுக்கு வயது 42. ஐந்தாறு வருடங்களுக்கு முன் அவருடைய முதல் மனைவி இறந்து விட்டாள். அவர் பாலக்குட்டியம்மாவை இரண்டாவது மனைவியாக மணம் செய்து கொண்டது மூன்று வருடங்களுக்கு முன்புதான். அவளுக்கு வயது 17. ஆனால் இருபது வருடங்களாக அவர் சுப்பம்மா என்பவளை வைப்பாக வைத்துக் கொண்டிருந்தார். இளைய மனைவியுடன் ஒற்றுமையாகச் சுமார் ஒரு வருடம் தான் சீதாராமைய்யா குடித்தனம் செய்திருக்கிறார். பிறகு சுப்பம்மாளின் போதனையின் பேரில் அவர் இளைய மனைவியைத் துன்புறுத்தி வந்ததாகத் தெரிகிறது. இளைய மனைவியின் சகோதரர்கள் திருப்பதிக்குப் போன போது சீதாராமையாவையும் அவருடைய மனைவியையும் கூட அழைத்துப் போக விரும்பினார்கள். சீதாராமையா அவர்களுடன் போக மறுத்து விட்டார். ஆனால் அவருடைய மனைவி மட்டில் சகோதரர்களுடன் திருப்பதி போய், கணவன் வீடு திரும்பினாள். அவளைச் சீதாராமையா வீட்டுக்குள் விடமாட்டேன் என்று கதவைத் தாழ்ப்பாள் போட்டு விட்டார். பிறகு அவளைத் தங்கள் கூடவே அழைத்துப் போவதாக அவளுடைய சகோதரர்கள் கூப்பிட்டும் அவள் கணவன் வீட்டிலேயே இருந்து எப்படியோ சமாளித்துக் கொண்டாள். மற்றொரு சமயம் பாலக்குட்டியம்மாளை அவளுடைய புருடன் தம் வீட்டை விட்டு வெளியே துரத்தி விட்டதாகச் செய்தி கேட்டுப் பக்கத்துக் கிராமத்திலுள்ள அவளுடைய சகோதரர்களும் தாய் மாமனும் அங்கே வந்தார்கள். அவர்கள் பாலக்குட்டியம்மாளுக்குக் கலியாண சமயத்தில் கொடுத்த சீர் சாமான்கள் ஒன்றும் வீட்டில் இல்லை என்பதை அறிந்து பக்கத்து வீட்டிலிருந்த வைப்புப் பெண்சாதி சுப்பம்மாளை விசாரித்தனர். அவள் அச்சாமான்களைத் தன் வீட்டிலிருந்து எடுத்து அவர்களெதிரில் தெருவில் வீசி எறிந்தாள். அவற்றைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு, தங்கள் சகோதரியையும் ஊருக்கு அழைத்துப் போய் விடத்தான் அவர்கள் முயன்றனர். அப்பொழுதும் பாலக்குட்டியம்மாள் தன் கணவனுடன் வசிப்பதையே விரும்பினாள். அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் ஏதோ கணவனுக்கும் மனைவிக்கும் ராஜி செய்து வைத்தனர். இப்படிக் கொஞ்ச நாள் இவர்களுடைய குடும்பம் ஓடிற்று.

1950 மே மாதம் 29 ஆம் தேதி இரவு. வீட்டில் சீதாராமையாவும் அவருடைய மனைவியும் தான் இருந்தார்கள். வேறு ஒருவரும் இல்லை. இரவு 9 மணி வரை பாலக்குட்டியம்மாளை அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் உயிருடன் பார்த்திருக்கின்றார்கள். மறு நாள் காலை 7 மணிக்கு அவள் பேச்சு மூச்சில்லாமல் மயக்கமாகக் கிடப்பதாக அடுத்த ஊரிலிருக்கும் அவளுடைய சகோதரர்களுக்கும் தாய் மாமனுக்கும் சீதாராமைய்யா செய்தி அனுப்பியதின் பேரில் அவர்கள் வந்தனர். பாலக்குட்டியம்மாள் இறந்து போய் விட்டாள் என்பது அவர்களுக்குத் தெரிந்தது.

சீதாராமைய்யா வீட்டில் தான் உட்கார்ந்திருந்தார். தமக்கு ஒன்றும் தெரியாதென்று அவர்கள் கேட்டதற்கு சொல்லி விட்டார். அவர்களுக்குச் சந்தேகம் தோன்றி இவ் விஷயத்தைப் போலிசுக்குத் தெரிவித்தனர். மாலை 4 மணிக்குப் போலீசார் வந்தனர். பிரேதத்தை டாக்டருடைய பரிசோதனைக்கு அனுப்பினர். டாக்டர் செய்த பிரேத பரிசோதனையில் தான் பாலக்குட்டியம்மாள் இறந்த காரணம் தெரிய வந்தது. அவளுடைய

கழுத்து பலமாக இறுக்கப்பட்டு உடனடியாகவே மரணம் ஏற்பட்டிருக்க வேண்டு மென்பது புலனாயிற்று. புருடன் சீதாராமய்யா பேரில் தான் சந்தேகம் விழுந்தது. உடனே அவரைப் போலீசார் கைது செய்தனர். மறு நாள் சாயந்திரம் அவர் மாஜிஸ்ட்ரேட்டின் முன்பு ஆஜர் செய்யப் பட்டார். அதற்கும் மறு நாள் சீதாராமைய்யா, மாஜிஸ்ட்ரேட் முன்பு ஒரு வாக்கு மூலம் கொடுத்தார். "நான் தான் என் மனைவியை கொலை செய்தேன்....அவள் எனக்கு இடையூறுகள் விளைவித்துக் கொண்டிருந்ததுடன் என்னைத் தன் சகோதரர்களைக் கொண்டு கொலை செய்து விடுவதாயும் பயமுறுத்தி வந்தாள்........அவர்கள் கையால் இறப்பதை விட சர்க்காரால் தூக்கு மாட்டப்படுவதே மேல் என்று உறுதி கொண்டு தூங்கிக் கொண்டிருந்த என் மனைவியின் கழுத்தை முறித்தேன். அவள் இறந்தாள்" என்று ஒப்புக் கொண்டார்.

ஆனால் அவர் மீது கொலை வழக்கு கோர்ட்டில் விசாரணை செய்யப்படும் போது சீதாராமைய்யா இதை ஒப்புக் கொள்ள வில்லை. "என்னைப் போலீஸ் இன்ஸ்பெக்டரும் டிப்டி சூப்பிரண்டெண்டும் பயமுறுத்தியதின் பேரில் தான் அவர்கள் சொல்லிக் கொடுத்ததையே நான் கிளிப்பிள்ளைப் போல் அன்று ஒப்பித்தேன். அது நானாக கொடுத்த வாக்கு மூலமல்ல. நானும் என் மனைவியும் சௌசன்னியமாகவே வாழ்க்கை நடத்தி வந்தோம். அன்று நான் வேலை செய்து விட்டு வீட்டுக்குத் திரும்பிய போது என் மனைவியைக் கூப்பிடக் கூப்பிட அவள் பதில் சொல்லவில்லை. படுத்திருந்த அவளைத் தட்டி எழுப்ப முயன்றேன். அவள் அசைய வில்லை. உடனே எல்லோருக்கும் இச் சங்கதியைச் சொல்லி அனுப்பினேன். நான் நிரபராதி"—என்று சொன்னார்.

7719 எதிரிக்கு ஆஜரான வக்கீல் அவர்கள் வேறு ஒரு விதமாகவும் கொலை நடந் திருக்கலா மென்பதை எடுத்துக் காட்டி வாதாடினார். அதாவது சீதாராமைய்யா வீட்டி லில்லாத சமயம் அவருக்குத் தெரியாமல் அவருடைய வைப்புப் பெண்சாதி சுப்பம்மாள் வீட்டுக்குள் வந்து அவருடைய மனைவியைக் கொலை செய்து இருக்கலா மென்றும்; சீதாராமய்யா வீடு வந்ததும் உண்மை இந்த தெரிந்தும், சுப்பம்மாளைக் காட்டிக் கொடுக்கக் கூடா தென்று எண்ணங் கொண்டே 'நான் தான் கொலை செய்தேன்' என்று பொய்யாக ஒப்புக் கொண்டு சுப்பம்மாளைக் காப்பாற்றி இருக்கக் கூடுமென்றும் வாதாடினார்.

கொலை வழக்கு சீதாராமைய்யா பேரில் தான். இவ்வழக்கில் முக்கிய விஷயங்கள் மேலே கண்டவைதான். அவருடைய மனைவியைக் கொலை செய்தது யார்? உங்கள் தீர்ப்பு என்ன?

* * *

முதலில் இவ்வழக்கு குண்டூர் செஷன்ஸ் கோர்ட்டில் நடந்தது. நான்கு அசெசர்களும், செஷன்ஸ் ஜட்ஜும் சீதாராமய்யா தான் தம் மனைவியைக் கொலை செய்தார் என்று அபிப்பிராயப் பட்டனர். சீதாராமய்யாவுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அதன்பேரில் சென்னை ஹைகோர்ட்டில் நடந்த அப்பீலை இரண்டு உயர் நீதிபதிகள் விசாரித்தனர். நீதிபதி மாக் அவர்கள் சீதாராமய்யா தான் கொலை செய்தார் என்று அபிப்பிராயப் பட்டனர். ஆனால் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் வேறு விதமாக அபிப்பிராயப்பட்டனர். அதாவது எதிரி முதலில் குற்றத்தை ஒப்புக் கொண்டாலும், பிறகு அதை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டதால், வேறு ருசு ஒன்று மில்லாமலிருக்கும் போது அதை மட்டில் ஆதாரமாக வைத்து அவரைக் குற்றவாளி என்று தீர்மானம் செயவது சரி அல்ல என்பது தான் நீதிபதி சோமசுந்தரம் அவர்களின் அபிப்பிராயம் இவ்விதம் இரண்டு உயர் நீதிபதிகளுக்குள் அபிப்பிராய பேதம் எற்பட்டால், அதை ஒரு மூன்றாவது உயர் நீதிபதி அவர்களின் அபிப்பிராயத்திற்கு அனுப்பி அவர் சொல்லுவதே தான் தீர்ப்பாகும் எனபதே சட்டம். ஆனால் நீதிபதி மாக் அவர்கள் அப்படி செய்ய இஷ்டப்படாமல், நீதிபதி சோமசுந்தரம் அவர்களின் முடிவையே தாமும் ஒப்புக்கொண்டதின் பேரில் சீதாராமய்யா விடுவிக்கப் பட்டார். [1953—ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—மதராஸ்—61]

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMUDAR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B. L.

தமிழில்
சட்டப் புத்தகங்கள்

"வக்கீல்" பிரசுரங்கள்

"வக்கீல்" 1952-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணையுடன் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 5 8 0

"வக்கீல்" 1951-ம் வருடத்திய பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 4 0 0

விற்பனை வரி (**விதிகள் உள்பட விளக்கம்**) ரூ. 2 0 0

சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம். [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. 1 4 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

வி. பி. பி. கிடையாது.
அணா 8 சேர்த்து அனுப்பினால்
ரிஜிஸ்டர் தபால் மூலம்
அனுப்பப்படும்.

கீழே கண்ட விலாசத்திற்கு தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

மானேஜர்,
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26 :: கும்பகோணம் (S. I.)

ஸ்டார் புகையிலை கம்பெனி
மார்க்
ஸ்டார் TRADE MARK புகையிலை
சிவபுரி
புதுக்கோட்டை

சுவைப்பதற்கு
மனோரம்மியமானது

ஸ்டார் புகையிலை கம்பெனி,
உரிமையாளர்கள்:—
மீ.ந.அ.செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்
தபால்பெட்டி நீ. 20.
புதுக்கோட்டை.

ஸ்தாபிதம் 1909 போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

REGISTERED
TRADE MARK

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற
சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத் தைலம்,
கோகுல் கூந்தல் தைலம்
வாசனைப்பாக்கு, பலகாய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

Sole Agents:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris,
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TDR.